Registered as a news paper.

14 JUN 2004

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 31 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 24 (13.06.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :255

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்ப்பாணம்.



* பல் கட்டுவதற்கும்,
* பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
* இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சி/2494)

# புலிகளுடனான பேச்சுக்களை ஓகஸ்ட்டில் ஆரம்பிக்கத் திட்டம்!

## அரச தரப்புத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் சமாதானப் பேச்சுக்களை நடத்த அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக ஆளும்கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இந்தப் பேச்சுவார்த்தைகள் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறும் எனவும், முதல் சுற்றுப்பேச்சுக்கள் - தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான விடயங்கள் ஆராயப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்துடன் இணைந்துள்ள ஜே.வி.பி., இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக பேச்சு நடத்தப்படுவதை கடுமையாக எதிர்த்து வரும் நிலையில், ஜனாதிபதி சந்திரிகா இந்த முடிவை எடுத்துள்ளது அவதானிகள் மத்தியில் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

இடைக்கால நிர்வாகசபை உருவாக்கப்பட்டு மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் இறுதித்தீர்வு குறித்துப் பேசப்படும். உத்தேச இடைக்கால நிர்வாகசபை இறுதித் தீர்வின் ஒரு படிநிலையாகக் கொள்ளப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - ஜே.வி.பிக்கு உறுதியளித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



இரத்தினபுரி - குக்குலேகங்கவில் ஆரம்பமான இராணுவ ஒத்திகைப் பயிற்சியின் ஆரம்பநிகழ்வில் அணிவகுத்து நிற்கும் அமெரிக்கப் படையினர்.

# உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க சர்வதேச தலையீடு தேவையில்லை!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

நாட்டில் உள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க சர்வதேசத்தின் தலையீட்டினை எதிர்பார்க்கமுடியாது என பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு மற்றும் பிரதிப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டம் கலவான பகுதியில் உள்ள குக்குலேகங்கவில் ஆரம்பமான ஐக்கிய நாடுகள் சமாதான உதவி நடவடிக்கை பயிற்சியின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்று (12 ஆம் பக்கம் பார்க்க)

# இறைமையைப் பாதிக்காத வகையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள்!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



விடுதலைப் புலிகளுடன் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச்சுக்களை நடத்தவேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது.

ஆனால் இடைக்கால நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்கள் நாட்டின் இறைமையைப் பாதிக்காத வகையிலேயே நடத்தப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

ரூபவாஹினி மூலம் நேற்றிரவு ஜனாதிபதி சந்திரிகா நிகழ்த்திய விஷேட உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கே தீர்மானித்தது. இதனடிப்படையிலேயே நோர்வே அழைக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்த நிலையில் அரசாங்கம் இறுதித்தீர்வு குறித்து பேச விரும்புகையில், புலிகள் இடைக்காலத் தீர்வு குறித்துத் தெரிவித்தனர்.

எனவே இடைக்காலத் தீர்வு (12 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவ இளைஞரைத் தாக்கிய சிப்பாய் மீது பதில் தாக்குதல்!

## எதிரொலியாக மீன் பிடிக்கத் தடை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - கற்கோவளம் பகுதியில் நேற்றுக்காலை இராணுவச் சிப்பாய் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக மீனவர்கள் எவரையும் கடலுக்குச் செல்ல படைத்தரப்பு அனுமதிக்கவில்லை.

கற்கோவளம் கடற்கரையோரமாக அமைந்துள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து மீனவர் ஒருவரை இராணுவச் சிப்பாய் ஒருவர் தாக்கினார்.

இதனால், ஆத்திரமுற்ற இளைஞரும் இராணுவச் சிப்பாயைத் தாக்கியுள்ளார். மீன்பிடிக்கச் செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தை எடுத்துச் செல்லாதது தொடர்பாகவே இருவருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தையடுத்து, அங்கு விரைந்த இராணுவ அதிகாரிகள் அங்கு சுமுக நிலையை ஏற்படுத்தினர். எனினும், அந்தக் காவலரண் ஊடாக மீனவர்கள் எவரையும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் சத்தியாக்கிரகம்!

# சுதந்திர முன்னணி அரசுடன் இ.தொ.கா இணைய வேண்டிய தேவையில்லை!

# அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் சத்தியாக்கிரகம்!

## எதிர்க்கட்சிகள் நடத்தத் திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து தலைநகர் கொழும்பில் பாரிய சத்தியாக்கிரகப் போரட்டத்தினை நடத்த எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திர முன்னணி அரசுடன் இ.தொ.கா இணைய வேண்டிய தேவையில்லை!

## ஆறுமுகன் தொண்டமான் கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் நாம் பேசவுமில்லை, அரசாங்கத்துடன் இணைய வேண்டிய தேவையும் இல்லையென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இந்தப் பேட்டியில் அவர் மேலும. தெரிவித்ததாவது -

நாம் அரசுடன் இணைவதா, இல்லையா என இதுவரை எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. நாம் இருந்த நிலைப்பாட்டில் எவ்வித வேறுபாடுகளும் இல்லையென்பதைத் தெளிவுபடுத்துகின்றோம்.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு தோல்வியடைந்த பின், அந்த முன்னணியுடன் இணைந்து எதிர்க்கட்சி ஆசனங்களில் உள்ளோம். அதில் இதுவரை எதுவித மாற்றமும் இல்லை.

கடந்த காலத்தில் எமது நிலைப்பாடு தொடர்பாகப் பரந்த கலந்துரையாடல்கள் இருந்தன. பிரதான இரண்டு கட்சிகளுக்கும் நாடாளுமன்றில் பெரும்பான்மை இல்லாததே அதற்குக் காரணமாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசு, தற்போது ஆட்சியிலுள்ளது. ஆனால், நாங்கள் அவர்களுடன் கலந்துரையாடல்களில் பங்குபற்றவில்லை.

ஆனால், தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க எமது ஆதரவைப் பெறுவதற்கு அரசிற்கு ஏதாவது எண்ணமிருக்கலாம். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தீர்மானம் கூட்டமைப்பின் ஆட்சியை தீர்மானிக்குமென்பது இரகசியமானதல்ல.

ஆனால், அரச உயர்பீடங்களுடன் கலந்துரையாடல்கள் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. அரசாங்கத்துடன் இணைவது குறித்து நாம் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

அரசாங்கத்துடன் இணைய வேண்டிய அவசியமும் எமக்கில்லை. எதிர்காலத்திலும் என்ன நடக்குமென்பதை சொல்ல முடியாது.

சமாதான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தற்போதைய அரசு தீர்மானித்திருப்பது நல்ல

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க

# நோர்வே ஊடாக மறு யோசனையை புலிகளிடம் சமர்ப்பிக்க அரசு முடிவு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் தடைபட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிப்பதற்குத் தடையாகவுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை நிறுவுவது தொடர்பாக மாற்று யோசனைகள் அடங்கிய கடிதத்தினை நோர்வே அரசாங்கம் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தையை தற்போது மீள ஆரம்பிப்பது தொடர்பான தடைகள், மற்றும் அரசு அதற்குச் சமர்ப்பித்துள்ள ஆலோசனைகளும், அரசு அனுப்பவுள்ள இந்தக் கடிதத்தில் இடம்பெற்றிருப்பதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதெனில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297,
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...
(சி/2489)

# நியாப் இரண்டாம் கட்டம் குறித்து செயலகத்தில் கலந்துரையாடல்!

நியாப் திட்டத்தில் இரண்டாம் கட்டச் செயற்பாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று மேலதிக அரசாங்க அதிபர் அ.சிவசுவாமி தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நியாப் திட்ட அலுவலர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு நியாப் இரண்டாம் கட்டச் செயற்பாட்டுத் திட்டத்தின்கீழ், யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட வேண்டிய கிராமங்கள் தொடர்பாகவும், அங்கு மேற்கொளளப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாகவும் விரிவான முறையில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெளிவுபடுத்தினர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள கிராமங்களில் உவர்நீர் வயல் நிலங்களுக்குள் புகுதல், மக்கள் வீடுகள் இன்றி குடிசைகளில் வாழ்தல், பல வீதிகள் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படல், மக்கள் தொழில் வாய்ப்பற்று காணப்படுதல், கிராமங்களில் குடிநீர்ப்பிரச்சினை போன்ற கருத்துக்கள் முன்வைக்கப் பட்டது.

இதற்கமைய இந்தக் கருத்துக்களை பரிசீலனை செய்து மக்களுகக்குத் தற்போது அவசியமான திட்டங்களை இனங்கண்டு, 2005 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## உதைபந்தாட்ட முக்கியஸ்தர்களுக்கான கலந்துரையாடல்

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் அனைத்து உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு நல்லூர் வைமன் வீதியில் அமைந்துள்ள யாழ்.நல்லூர் அரசியற்துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. தமிழீழ விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## இன்று நினைவு தினக்கூட்டம்

சர்வதேச மார்க்ஸியக் குழுவின் ஏற்பாட்டில் தொழிற்சங்கப் போராளிகளான கந்தசாமி, சோமபாலா ஆகியோரின் நினைவு தினக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் முன்பாகவுள்ள, புதிய உயர்கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில், தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தோழர்கள் மற்றும் பிரமுகர்களும் நினைவுரை நிகழ்த்தவுள்ளனர். (206)

## ஆசிரிய கலாசாலை பெறுபேறுகள் வெளியாகின

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2002/2003 கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களின் இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்துள்ளன. பெறுபேறுகளை, கலாசாலையில் இன்று பார்வையிடலாம் என கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.


நிறஞ்சனாஸ் சங்கானை
அர்ஜீன், ரம்பா, ஆனந்தராஜ் நடித்த
அடிமைச் சங்கிலி
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
INTREPID
(சி-2621)

ராஜா யாழ்ப்பாணம்.
3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த
ஆய்த எழுத்து

காட்சிநேரம்:-10.30, 2.30,6.30 மட்டும் (பு.நே)
(சி-2623)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட
டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி
(கில்ஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00
(சி-2622)


# யாழ்.மாநகரசபைக்கு மூலதன நன்கொடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்கு வடக்கு கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து ஒரு இலட்சத்து 81 ஆயிரத்து 82 ரூபா 2004 ஆம் ஆண்டிற்கான நன்கொடையாகக் கிடைத்துள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிதியில் 89 ஆயிரத்து 600 ரூபா யாழ்.மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கும், பொது நூலகங்களுககான நன்கொடையாக 2 ஆயிரத்து 500 ரூபாவும், மகப்பேற்று, பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்திற்கு 57 ஆயித்து 68 ரூபாவும், பொது மலசலகூடப் பராமரிப்புக்கு 9 ஆயிரத்து 416 ரூபாவும் யாழ்.மாநகர சபையால் வழங்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே பதிவு செய்யாத சனசமூக நிலையங்கள் மாநகர சபையில் பதிவினை மேற்கொண்டு இந்த நன்கொடையைப் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை - இதுவரையில் 2004 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபையினை தெரிவு செய்யாத சனசமூக நிலையங்களும் தெரிவுகளை மேற்கொண்டு விபரங்களை மாநகர சபையில் சமர்ப்பித்து இந்த நன்கொடையைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.நகரப் பகுதியில் மின் ஒளி பட்டக் காட்சி!

வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று வீச ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து யாழ்.நகரில் பட்டம் விடும் சீசனும் ஆரம்பமாகியுள்ளது.

இதன் சிறப்பு அம்சமாக பட்டங்களுக்கு மின்னொளி பாய்ச்சப்பட்டு இரவுவேளைகளில் வானில் பறப்பதை அவதானிக்க முடிகின்றது.

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அண்மையில் இத்தகைய 10 அடி உயர எட்டு மூலைப் பட்டம் ஒன்று விட்டு விட்டு எரியும் மின் தொடர் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டு கடந்த சில தினங்களாக வானில் பறப்பதனை அவதானிக்க முடிகின்றது.

இந்தப்பட்டத்தினை பாசையூர் புனித அந்தோனியார் ஆலய நவநாள் திருப்பலிக்கு வரும் அடியார்கள் கூட்டம் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (58)



நாடகமும் அரங்கியலும் இறுதி வருட மாணவர்களினால் நடாத்தப்பட்டு வரும் 'பல்கலைக்கழக கல்வி நிலைமையினை அறிதல' தொடர்பான அரங்க ஆய்வின் இரண்டாம் கட்டமான 'விடம்' அரங்க ஆற்றுகையின் ஓர் காட்சியைக் காணலாம்.

## ஆசிரிய மாணவர்களின் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(சுதுமலை)

ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் ஆசிரிய மாணவர்களிற்கு இந்த மாதம் நடைபெறவிருந்த பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது.

முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களிற்கு யூன் மாதம் நடைபெறவிருந்த ஆண்டிறுதிப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறும் என கல்வி உயர் கல்விஅமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

இறுதியாண்டு ஆசிரிய மாணவர்களினது பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகுவதில் ஏற்பட்ட கால தாமதம் காரணமாகவே மேற்படி இருவருட ஆசிரிய மாணவர்களிற்கான பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாகசம் மந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (91)


## வடகிழக்கு மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

City & Guilds

London City&Guilds ஆனது உலகின் 102 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டு இலண்டனைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் நிறுவனமாகும். இது தகவல் தொழினுட்பத் துறையில் வழங்கிவரும் சான்றிதழ்கள் உலகின் எப்பகுதியிலும் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதுமாகும். இப்போது அரச யாழ் தொழிநுட்பக் கல்லூரியின் அனுசரணையுடன் STP கணனி நிறுவனத்தில் இப்பாடநெறிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் இச்சான்றிதழ் இலங்கை அரசாங்கத்தாலும், சர்வதேசத்தாலும் அங்கீகாரத்துக்குள்ளாகின்றது. தராதரமிக்க இப்பாடநெறியை வடபகுதியில் நடாத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் STP கணனி நிறுவனம் ஆகும்.

| பாடநெறி | City& Guilds சான்றிதழ் கட்டணம் |
|---|---|
| e-Quals | |
| 1. Computer User | £47 |
| 2. Software Dev 'oper | £56 |
| 3. System Support | £84 |

மேற்படி பாடநெறிக்கான வகுப்புக்கள், செய்முறைகள் STP கணனி நிறுவனத்தில் நடைபெறும். விண்ணப்பப் படிவங்களை யாழ் தொழிநுட்பக் கல்லூரியில் அல்லது STP கணனி நிறுவனத்தில் பெற்று 30-06-2004க்கு முன்பதாக இயக்குநர். STP கணனி நிறுவனம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

குறிப்பு: பயிற்சி, பரீட்சை, சான்றிதழ் தொடர்பான விபரங்களிற்கு
அதிபர், தொழினுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம். T.P: 2225409அல்லது
இயக்குநர், STP கணனி நிறுவனம், யாழ்ப்பாணம்.T.P: 2222674


## இறக்குமதியாளர் கவனத்திற்கு

வருவாய்ப் பகுதியில் இறக்குமதிக்கான உரிமத்தைப் பெற்று, இறக்குமதியிலீடுபடாத இறக்குமதியாளர் அனைவரையும் 2004.06.30 ஆம் நாளிற்கு முன் கிளிநொச்சியிலமைந்துள்ள வருவாய்ப்பகுதிச் செயலகத்துக்கு நேரில் வருமாறு வேண்டுகிறோம். தவறுவோரின் உரிமம் நீக்கப்படுமென்பதை அறியத்தருகிறோம்.

பொறுப்பாளர்,
நடுவப் பணியகம்,
வருவாய்ப்பகுதி - நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள். (759)


YOGI BEAUTY PARLOUR
(Academy of Beauty Culture & Hair Dressing)
HOME SCIENCE ACADEMY
குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் 21.06.2004 முதல் ஆரம்பமாகவுள்ளன
1) அழகுக்கலையும் சிகிச்சை முறைகளும் (Beauty Culture and Theraphy)
2) முக ஒப்பனையும், தலை அலங்காரங்களும், மணப்பெண் அலங்காரமும்.
இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும்.
சேரவிரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.
கேக் கண்காட்சி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று 27.06.2004 அன்று 2.30 P.M மணிக்கு நடைபெறவுள்ளதால், பயிற்சியினை முடித்த மாணவிகள் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
75, அம்மன் றோட், நல்லூர் - யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரகாளி அம்மன் கோவில் முன்பாக)
T.P : 222 2796
(சி-2661)




கம்பன்புலம் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கை வாழ்விடமாகவும், தற்சமயம் கொழும்பில் தற்காலிகமாக வாழ்பவருமாகிய

## சி.ஐயாத்துரை

இம்மாதம் 21.05.2004 இல் கொழும்பு மேல் நீதிமன்றில் மேல் நீதிபதி எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் தீவு முழுவதிற்குமான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (760)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# மாவீரர்களின் பெற்றோர்களை திருமலை கட்டளைத் தளபதி சந்திப்பு

திருகோணமலை மாவட்டத்தின் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைச் சேர்ந்த மாவீரர்களின் குடும்பத்தவர்களை மாவட்டக் கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம், அரசியற்துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் மற்றும் மாவட்டத்தின் ஏனைய தளபதிகள் சந்தித்தனர்.

சேனையூர் மத்திய மகா வித்தியாலய கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற இந்தச்சந்திப்பில், 350 மாவீரர்களின் குடும்பத்தவர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்டங்களின் அரசியற்துறை மற்றும் இராணுவப் பிரிவுகளுக்கான புதிய நியமனங்களின் பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

மாவட்டத்தின் கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் மற்றும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஆகியோர் மாவட்டத்தின் - மாவீரர்களின் குடும்பத்தவர்களுடன் தம்மை அறிமுகப்படுத்தும் நோக்கில் இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் 350 மாவீரர்களின் திருவுருவப்படங்கள் உத்தியோகபூர்வமாக அவர்களின் குடும்பத்தவர்களுக்கு வழங்கப்பட்ட அதேவேளை, அனைத்து மாவீரர்களதும், குடும்பத்தவர்களுக்கும் மாவட்டக்கட்டளைத் தளபதி, மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மற்றும் ஏனைய தளபதிகள் ஆகியோர் அன்பளிப்புப் பொதிகளையும் வழங்கினர்.

திருகோணமலை மாவட்ட மாவீரர் அகமகளிர் பிரிவுப் பொறுப்பாளர் எழிலிசையின் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மூதூர்பகுதித் தளபதி குஞ்சன் உட்பட, மாவட்டத்தின் அரசியற்துறை முக்கியஸ்தர்களும் இராணுவப்பிரிவுத் தளபதிகளும், பெருமளவான போராளிகளும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய மாவட்டத்தின் அரசியற்துறை பொறுப்பாளர் சி.எழிலன் தமதுரையில் -

இன்று நாம் அநுபவிக்கும் அமைதிச் சூழலுக்கும் மீண்டும் ஒரு போர் வெடித்துவிடாத நிலமைக்கும், தமழீழத்தேசத்தின் சுதந்திர வேள்வியில் ஆகுதியான மாவீரரின் மாபெரும் தியாகமே காரணமாகும்.

இன்று இலங்கை அரசோ அல்லது சர்வதேசமோ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு முன்வந்து இருப்பதற்கும் இந்த மண்ணின் விடுதலைக்காக வீழ்ந்து விதையாகிய மாவீரரின் தியாகமே முழுமுதல் காரணமாகும் என்று குறிப்பிட்டார்.

மாலை 3 மணிக்கு ஆரம்பமான நிகழ்வு மாலை 6.30 மணியுடன் நிறைவு பெற்றது. (10-04)

## இராணுவப் பொருட்கள் மகாஓயாவில் மீட்பு!

நீரோடை ஒன்றிற்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இராணுவப் பொருட்கள் சிலவற்றை மகாஓயா பொலிஸார் மீட்டெடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாஓயா பகுதியில் பொலிஸாரால் மீட்கப்பட்ட பொருட்களை, மகாஓயா மற்றும் கரடியனாறு பிரதேசத்தில் அச்சிடப்பட்ட நான்கு வரைபடங்கள் இரு சங்கேத தாள்கள், புவிநிலை காட்டி (ஜி.பி.எஸ்), நைற்விசன், தொலைத்தொடர்பு சாதனம், றைபிள், பயனைட் கருவி ஆகியன அடங்குகின்றன.

இது குறித்து மகாஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாடாளுமன்றத்துக்குள் வன்முறையில் ஈடுபடுவோரை பொலிஸார் விசாரிக்கலாம்

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கெதிராக குற்றத்தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் செய்வதற்கு பொலிசாருக்கு எந்தவொரு தடையும் இல்லை என்று சபாநாயகர் டபிள்யு.ஜே.எம். லொக்குபண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சுதந்திரமாக கருத்துக்களைத் தெரிவிக்கும் சிறப்புரிமை மாத்திரமே நாடாளுமன்றத்துக்குள் வழங்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தினுள்ளே வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக- நேரடி வீடியோ காட்சிகள் இருப்பதனால், பொலிஸார் அதனூடாக விசாரணைகளை மேற்கொள்ள எந்தவொரு தடையுமில்லையென்று சபாநாயகர் லொக்குபண்டார தெரிவித்தார்.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து, பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வது தொடர்பாக அந்தக்கட்சி முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவ அதிகாரிகள் நேற்று முதல் மாற்றம்!

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல - சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் சில மாற்றங்களை அறிவித்துள்ளார்.

நேற்றுமுதல் நடைமுறைக்குவரும் மாற்றங்களின்படி, இலங்கை தேசிய காவற்படையின் (எஸ்.எல்.என்.ஜி) யின் தளபதியாக இருந்த பிரிகேடியர் ஏ.எம்.பி.அமுனுகம இந்தப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் எதற்காக நீக்கப்பட்டார் என்றோ, இவர் வேறு புதிய பதவிக்கு நியமிக்கப்பட்டரா என்பது குறித்தோ, எந்தத் தகவலும் இராணுவத் தலைமையகத்தால் வெளியிடப்படவில்லை.

இதேவேளை இராணுவத் தொண்டர் படையின் தலைமையகத்தில் பயிற்சிக்கான மேற்பார்வையாளராக இருந்த பிரிகேடியர் வீரக்கோன் இலங்கை தேசிய காவற்படையின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

11 ஆவது டிவிஷன் தலைமையகத்தில் தொண்டர் படைகளின் விவகாரம் தொடர்பான இணைப்பதிகாரியாகப் பணியாற்றிய கேணல் ஏ.வீரக்கோன் நேற்று முதல் இராணுவத் தொண்டர்படை தலைமையக பயிற்சிப் பிரிவின் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



கடற்புலி மாவீரர் லெப். கேணல் சாள்லின் 11ஆம் ஆண்டு நினைவாக முல்லைத்தீவில் அமைக்கப்பட்ட நினைவு மண்டபத்தை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை திறந்து வைப்பதையும், லெப். சாள்ஸின் நினைவுத்தூபியையும் படங்களில் காணலாம்.

# ரூபவாஹினி, லேக்ஹவுஸ் மீது நஷ்ட ஈடு கோருகிறார் ஹக்கீம்

(கொழும்பு)

தனது பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் செயற்பட்டதாக, ரூபவாஹினி கூட்டுத்தாபனம், லேக்ஹவுஸ் நிறுவனம் ஆகியவற்றிடம் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நஷ்டஈடு கோரியுள்ளார்.

இதற்கான கோரிக்கை விடுக்கும் நிபந்தனைக் கடிதங்களை தனது சட்டத்தரணி ஊடாக அவர் இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் நேற்று அனுப்பி வைத்தார்.

தனக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டதாகவும், விசேட நிகழ்சிகளை ஒலிபரப்பியதாகவும் இரண்டு நிறுவனங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஒவ்வொரு சம்பவத்துக்கும் ஒரு பில்லியன் ரூபா நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் ரவூப் ஹக்கீம் கோரியுள்ளார்.

குமாரி குரே என்ற பெண் சம்பந்தப்பட்ட விடயத்தைப் பயன்படுத்தி, தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்ட செய்தி வெளியிட்டதாகவும் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் நஷ்ட ஈட்டுத் தொகையை அடுத்த 14 தினங்களுக்குள் செலுத்த வேண்டுமென்று கோரியே, ரவூப் ஹக்கீம் சார்பில் சட்டத்தரணி இந்த நிபந்தனைக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

# நாடாளுமன்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன

நாடாளுமன்றின் செங்கோல் காணாமல் போனமை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளை நாடாளுமன்ற அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த நாடாளுமன்ற வன்முறைகள் தொடர்பாக சபாநாயகருக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பொருட்டு, அன்றைய நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் ஒளிப்பதிவுகள் பெறப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, நாடாளுமன்றில் தாக்குதலுக்குள்ளானமை காரணமாக, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சிறி சுமங்கள தேரர் மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர் பலமுறை வாந்தியெடுத்ததாகவும், மூச்சு விடுவதற்கு சிரமப்பட்ட நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு தற்போது மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.தே.க புனரமைப்புக்கு விசேட குழு அமைப்பு!

## எஸ்.பி.திஸநாயக்க தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் புனரமைப்பு நடவடிக்கைகள் விசேட குழுவொன்றின் ஊடாக மேற்கொள்ளப்படுமென்று கட்சியின் தேசிய அமைப்புச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாகவே இந்தக் குழு அமைக்கப்படவுள்ளது.

இந்த விசேட குழு ஊடாக எதிர்காலத் திட்டம் தயாரிக்கப்படும். இதன் மூலமாக கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த பல்வேறு சிக்கல்கள் தீர்க்கப்படும்.

இந்த விசேட குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள் என்று அவர் தெரிவித்தார்.

# அரச தரப்பினால் தாக்கப்பட்ட பௌத்தபிக்கு வைத்தியசாலையில்

(கொழும்பு)

கடந்த செவ்வாய்கிழமை நாடாளுமன்றத்தில் நிகழ்ந்த அமளி, துமளியில் அரச தரப்பினரால் தாக்கப்பட்டு, ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வெளியேறிய ஹெல உறுமல நாடாளுமன்ற உறுப்பினரான கொலன்னாவ சிறி சுமங்கள தேரர் மீளவும் நேற்றுமுன்தினம் நவலோகா வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இங்கு இவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நவலோகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்றுமுன்தினம் அதிகாலை வாந்தியெடுத்ததாகவும், மூச்சு விடுவதற்கு பெரும் கஷ்டப்பட்டதாகவும், இதனால் வைத்தியர்கள் அவரை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து சிகிச்சையளித்து வருவதாகவும் ஹெல உறுமய மேலும் தெரிவித்தது.

அத்துடன், நாடாளுமன்ற களோபரத்தில் புதிதாக நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற அக்மீமன தேரரும் காயமடைந்தார். இவரும் நவலோகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹெல உறுமய தெரிவித்தது. (07)

# விபச்சார விடுதி சுற்றிவளைப்பில் அரசியல்வாதி உட்பட பலர் கைது!

கொழும்பில் விபச்சார விடுதிச் சுற்றிவளைப்பின்போது, ஆளும் கட்சியின் அரசியல்வாதியொருவர் உட்பட, இலங்கை மற்றும் ஐரோப்பியப் பெண்களையும், பொலிஸார் கைது செய்தனர்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள வியாபாரக் கட்டடத் தொகுதியொன்றின் 8ஆவது மாடியில் விபச்சார நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக கிடைத்த தகவலையடுத்து, குறிப்பிட்ட பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்தபோதே, இவர்கள் கைது செய்யப்பட்டனர். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, விபச்சார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர் எனச் சந்தேகிக்கப்படும் பெண் ஒருவர், மூன்று ஆண்களுடன் மது அருந்திக் கொண்டிருந்ததாகவும், இந்த மூவரில் ஒருவர் ஆளும் கட்சி அரசியல்வாதியெனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

### ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்ரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த ஆனமக சொற்பொழிவுத் தொடரில் இன்று காலை 10 மணியளவில் "கண்ணனின் கருணை" என்னும் பொருள் பற்றி சிவஞானம் பாலமுரளி சொற்பொழிவாற்றவுள்ளார். (17)

### நேர்முகப்பரீட்சை

(ஆழியவளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 14, 15, 16ஆம் திகதிகளில் செயலகத்தில் காலை 9 மணி முதல் நடைபெறும். (122)

### பல்கலைக்கழக கிரிக்கெட் போட்டி

# சென்ரலைட் - யங்ஸ்ரார் அணிகள் இன்றைய இறுதியாட்டத்தில் மோதும்!

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடாத்திவந்த 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் இந்த இறுதி ஆட்டத்தில் - யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

அழைக்கப்பட்ட நான்கு கழகங்களான கொக்குவில் சி.சி.சி. விளையாட்டுக்கழகம், யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ். பல்கலைக்கழகம் என்பவற்றுக்கிடையிலான லீக் முறை போட்டிகளிலிருந்து இறுதியாட்டத்திற்கு சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகமும், யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளன.

இந்த லீக் போட்டிகளின் ஸ்கோர் விபரம் வருமாறு:-

முதலாவது போட்டியில் கொக்குவில் சி.சி.சி. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, யாழ். பல்கழைக்கழகம் மோதியது. இதில் யாழ். பல்கலைக்கழகம் 30 ஓவர்களில் 149 ஓட்டங்களைப்பெற, அதனை எதிர்த்து ஆடிய கொக்குவில் சி.சி.சி. விளையாட்டுக் கழகம் 146 ஓட்டங்களை மட்டுமே பெற்றமையால் பல்கலைக்கழகம் 3 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 126 ஓட்டங்களை 30 ஓவர்களில் பெற்றது. அதனை எதிர்த்து ஆடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 115 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால், 11 ஓட்டங்களால் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

மூன்றாவது போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 30 ஓவர்களில் 192 ஓட்டங்களை பெற்றது. அதனை எதிர்த்து ஆடிய யாழ். பல்கலைக்கழகம் 157 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 35 ஓட்டங்களால் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

நான்காவது போட்டியில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்களில் 176 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் சி.சி.சி விளையாட்டுக்கழகம் 167 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 9 ஓட்டங்களால் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றது.

ஐந்தாவது போட்டியில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 30 ஓவர்களில் 168 ஓட்டங்களைப் பெற்றது. அதனை எதிர்த்து ஆடிய யாழ். பல்கலைக்கழகம் 28.3 ஓவர்களில் 169 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

ஆறாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் சி.சி.சி. விளையாட்டுக்கழகம் 30 ஓவர்களில் 245 ஓட்டங்களைப் பெற்றது. அதனை எதிர்த்து ஆடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 29.2 ஓவர்களில் 246 ஓட்டடங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இந்த ஆறு போட்டிகளின் அடிப்படையில் கொக்குவில் சி.சி.சி. விளையாட்டுக் கழகம் - தான் சந்தித்த 3 போட்டிகளிலும் தோல்வியினைச் சந்தித்தமையால் நான்காவது இடத்தினைப் பெற்றது.

யாழ். பல்கலைக்கழகம், யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவை தலா 2 போட்டிகளில் வெற்றிபெற்று இருந்த போதிலும் ஓட்ட விகித அடிப்படையில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும், யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இன்று பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த இறுதியாட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவரும், யாழ். பல்கலைக்கழக பௌதீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கே.அகிலன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (58)

## தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி நவம்பரில் இந்தியா வரவுள்ளது

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி எதிர் வரும் நவம்பர் மாதம் இந்தியா வரவுள்ளது. அப்போது இரண்டு டெஸ்டில் ஆடுகிறது.

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணி நவம்பர் மாதத்தில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 7 ஒருநாள் போட்டியில் விளையாடும் என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி ஆகிய இரண்டு தொடரில் இடம்பெறவேண்டும் என்று தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை வற்புறுத்தியது.

அத்துடன், இந்திய கிரிக்கெட்சபை அவுஸ்ரேலிய அணியின் பயணத்துக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இதனால், தென்னாபிரிக்க அணியின் சுற்றுப்பயணம் சர்ச்சையில் சிக்கியது.

இந்தநிலையில் டுபாயில் நேற்றுமுன்தினம் நடந்த சர்வதேச கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் பங்கேற்ற இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா, தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தலைவர் ராய் மாலி ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். இதில், சுற்றுப்பயண பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டது.

இதன்படி தென்னாபிரிக்க அணி நவம்பர் 4 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிக்குள் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் பயிற்சி ஆட்டத்தில் விளையாடும்.

விளையாட்டு

# பந்துவீச்சில் முன்னேறுவதற்கு கவனம் செலுத்தி வருகிறேன்

### இர்பான் பதான் பேட்டி

பந்துவீச்சில் அதிக முன்னேற்றம் பெற ஆர்வமுடன் இருப்பதாக இந்திய கிரிக்கெட் அணியின் புதுவரவான இர்பான் பதான் தெரிவித்தார்.

சமீபத்தில் நடைபெற்று முடிந்த பாகிஸ்தானுக்கு எதிரான இந்திய அணியின் வேகப் பந்துவீச்சில் புதிய புயலாக உருவெடுத்தவர் இர்பான் பதான். இந்தத் தொடரின் மூலம் வேகப்பந்து வீச்சில் நம்பிக்கை நட்சத்திரமாக மாறியுள்ள இர்பான் பதான் - இந்தத் தொடரானது தனது தன்னம்பிக்கையை அதிகரித்துள்ளதாகவும் பந்து வீச்சில் மேலும் முன்னேற்றம் பெறவிரும்புவதாகவும் தெரிவித்தார்.

பெங்களூரில் நடைபெற்று வரும் வேகப் பந்து வீச்சாளர்களுக்கான பயிற்சி முகாமில் கலந்து கொண்டுள்ள பதான் கூறுகையில்-

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரானது எனது நம்பிக்கையை அதிகரித்துள்ளது. இந்த தொடருக்குப பின் எனது தன்னம்பிக்கை வானளாவ உயர்ந்துள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் இலங்கைப் பயணத்தை எதிர்நோக்கி ஆவலுடன் இருக்கிறேன்.

திறமைகளை வளர்த்துக்கொள்ளும் யோசனை இருக்கிறதா என்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த பதான் கூறுகையில்-

தற்போது நான் எனது பந்து வீச்சில் முன்னேற்றம் பெறுவது குறித்து தீவிரமாக உழைத்து வருகிறேன். பந்து வீச்சில் நான் அதிக கவனம் செலுத்தி வருகிறேன். துடுப்பாட்டத்தில் திறமை தானாக வந்துவிடும்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடர் குறித்த அனுபவம் பற்றிப் பதான் கூறுகையில் - இந்தத் தொடரானது என்னிடம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச போட்டிகளில் விளையாடுவது என்பது எப்போதுமே வித்தியாசமானது தான் என்று கூறினார்.

### யூரோ 2004 சம்பியன் போட்டிக்கு

# புதிதாக அறிமுகமான பந்துக்கு கால்பந்து வீரர்களிடையே எதிர்ப்பு

(போர்டோ)

யூரோ 2004 கால்பந்து சம்பியன் போட்டியில் பயன்படுத்தப்படும் புதியவகை பந்திற்கு வீரர்களிடையே கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

நேற்றுத் தொடங்கிய யூரோ 2004 கால்பந்து சம்பியன் போட்டியில் பயன்படுத்தப்படும் கால்பந்திற்கு போர்த்துக்கலைச் சேர்ந்த வாஸ்கொடகமவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தப் பந்தை 'அடிடாஸ்' நிறுவனம் தயாரித்துள்ளது. மிகவும் மிருதுவாக இருக்கும் இந்த பந்துகளுக்கு வீரர்கள் மத்தியில் போதிய வரவேற்பு இல்லை. இந்தப் பந்து ஒரு 'பீச் போல்' போல இருப்பதாகவும், இந்த பந்தில் தனக்கு விருப்பம் இல்லை என்றும், இந்தப் பந்தை வேண்டிய இடத்துக்கு உதைக்க வேண்டும் எனில், மிகவும் கடினமாக உதைக்க வேண்டி இருப்பதாகவும் ஸ்பெயின் அணியின் இவான் ஹெல் குயேரா தெரிவித்தார்.

இந்தப் பந்தைப் பயன்படுத்துவதன் மூலம் கோல் கீப்பர்களுக்கு இக்கட்டான சூழ்நிலை ஏற்படும் என்று இங்கிலாந்து அணியின் கப்டன் டேவிட் பெக்காம் கருத்துத் தெரிவித்துள்ளார். மேலும் கடந்த பெப்ரவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் பந்து மிகவும் மிருதுவாக இருப்பதாகவும், வித்தியாசமாக இருப்பதாகவும் பெக்காம் தெரிவிததார்.

அதேசமயம், ஷொட் அடிப்பதற்கு வசதியாக இருப்பதாக பெக்காமும், கால்பந்து விளையாட்டு மேலும் முன்னேற இது உதவியாக இருக்கும் என்றும் ஷிடேனும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் புதிய வகைப் பந்தை 'பாஸ்' செய்வதும், கட்டுப்படுத்துவதும் மிகவும் கடினம் என்று ஸ்பெயின் பயிற்சியாளர் இனாகி சயீஸ் தெரிவித்தார்.

செக் குடியரசு அணி வீரர்களும் தங்களது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

புதிய பந்து அறிமுகப்படுத்தும்போதெல்லாம் இதுபோன்ற விவாதம் வரும் என்றும் அதேசமயம் சிறப்பாக விளையாடும் அணிக்கே வெற்றி என்றும் ஜேர்மனியின் கிரிஸ்டியன் சீஜ் தெரிவித்தார்.

# தலைமன்னார் - தனுஷ்கோடி இடையே கடலில் மூழ்கியிருக்கும் கற்பாலம்!

## செய்மதிப் படங்கள் மூலம் தெரியவந்தது



(புதுடெல்கி)

இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையே இயற்கையாக அமைந்த கற்பாலம் கடலில் மூழ்கி கிடக்கிறது. நவீன தொழில்நுட்பம் மூலம் அந்தப் பாலத்தை வெளியே கொண்டுவர முடியும் என்று நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

இராமாயண காலத்தில் இலங்கைமீது ராமர் போர் தொடுத்த போது - அவருடைய படைகள் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே மிதக்கும் கற்களால் பாலம் அமைத்ததாக இதிகாசத்தில் கூறப்பட்டுள்ளது.

கேட்பதற்கு நம்ப முடியாத வகையில் ஆச்சரியமாக இருந்தாலும், தமிழகத்திலுள்ள தனுஷ்கோடிக்கும் இலங்கையில் உள்ள தலைமன்னாருக்கும் இடையே பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு இயற்கையான கற்பாலம் இருந்ததும் அது கடலுக்குள் மூழ்கிக் கிடப்பதும் இப்போது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தில் (நாசா) செயற்கை கோள் ஒன்று சமீபத்தில் இந்திய, இலங்கை பகுதிகளை படம் பிடித்து அனுப்பியது.

அதில் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே கடலுக்குள் மூழ்கியுள்ள கற்பாலம் பதிவாகி இருந்ததைக் கண்டு விஞ்ஞானிகள் திகைத்துப் போனார்கள்.

நெதர்லாந்து நாட்டின் பல்கலைக்கழகத்தில் பூகோளவியல் விஞ்ஞானியாகப் பணியாற்றும் ஆர்.டி.சில்லிங் என்வர், நாசா செயற்கைகோள் படத்தை மையமாக வைத்து சில ஆய்வுகளை மேற்கொண்டார்.

அப்போது தனுஷ்கோடி - தலைமன்னார் பாலம் பற்றி மேலும் பல புதிய தகவல்கள் கிடைத்தன. தனது ஆராய்ச்சி பற்றி அவர் கூறியதாவது-

இந்தியாவும் - இலங்கையும் இயற்கையிலே ஒரு பாலத்தால் இணைக்கப்பட்டு இருந்தன. இதற்கு ஆதாம் பாலம் என்று பெயர். தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்கும் இடையே இருந்த இந்தப் பாலம் பல சின்னஞ் சிறிய தீவுகள் ஒன்றாக இணைந்து உருவானது ஆகும். இந்த தீவுகள் சுண்ணாம்பால் ஆனவை.

கடல் நீருக்கு வெளியே காட்சி அளித்த இந்தச் சுண்ணாம்பு கற்பாலமானது காலப்போக்கில் மெல்ல மெல்ல கடலுக்குள் மூழ்கிவிட்டது. இப்போது கடல் மட்டத்தில் இருந்து சுமார் 2 மீற்றருக்கும் கீழே சுண்ணாம்பு கற்பாலம் மூழ்கிக் கிடக்கிறது. நாசா செயற்கைகோள் படத்தில் அதைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

கடலில் மூழ்கியிருக்கும் பாலத்தை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கடல்மட்டத்திற்கு மேலே கொண்டுவரமுடியும்.

சுண்ணாம்பு என்பது கல்சியம் காபனேட் ஆகும். சுண்ணாம்புப் பாறைக்குள் ஆழமாக துளைகள் போட்டு அதில் சல்பூரிக் அமிலத்தைச் செலுத்த வேண்டும். அப்போது சுண்ணாம்புக்குள் ரசாயன மாற்றம் ஏற்பட்டு ஜிப்சமாக (கல்சியம் சல்பேட்) மாறிவிடும்.

சுண்ணாம்பை விட ஜிப்சம் அதிக இடத்தை ஆக்கிரமிக்கக் கூடியது. சுண்ணாம்பு ஜிப்சமாக மாறும்போது பாறையின் அளவு பெரிதாகி மேலே எழும். இதனால் கடலுக்குள் மூழ்கி கிடக்கும் சுண்ணாம்பு கற்பாலம், ஜிப்சம் பாலமாக கடல் மட்டத்துக்கு மேலே பல அடி உயரத்திற்கு வெளியே எழும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# பாதசாரிகளும், வாகன செலுத்துனர்களும் வீதி ஒழுங்கு பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும்

## யாழ். மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாதசாரிகளும், வாகனத்தைச் செலுத்துவோரும் வீதி ஒழுங்குகள் பற்றிய அறிவினைப்பெற்றிருந்தால், வீதிவிபத்துக்களைத் தவிர்க்க முடியும் என யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்திருக்கும் விபத்துக்கள் தொடர்பாக அவரிடம் கேட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது-

இலங்கைத்தீவில் போக்குவரத்தில் கணிசமானளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த பத்து வருடகாலங்களில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களினது எண்ணிக்கையும், சாரதி அனுமதிப்பத்திர உரிமையாளர்களினது எண்ணிக்கையும் கணிசமானளவு அதிகரித்துள்ளது.

இதன் விளைவாக வீதிகளில் வீதிப்பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து முகாமைத்துவம் போன்றதுறைகளில் பிரச்சினைகள், அதிகரித்து வரும் வீதிவிபத்துக்கள், அதனால் ஏற்படும் உயிரிழப்புக்கள், விபத்துக்களினால் அங்கவீனமானவர்களின் எண்ணிக்கை, அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் என்பன பன்மடங்காக அதிகரித்துள்ளது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை வாகன எண்ணிக்கையின் அதிகரிப்புக்கு ஏற்றவாறு வீதிகள் விஸ்தரிக்கப்படவில்லை. வீதிகளில் அபாய எச்சரிக்கைச்சைகைகள், வீதியை ஒழுங்குபடுத்தும் சைகைகள், கட்டாயச்சைகைகள், சாரதிகளுக்கு பயனுள்ள வேறு சைகைகள், வீதிக் குறியீடுகள், தகவல் தரும் சைகைகள் என்பன இடபபடாமை வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணிகளாக அமைந்துள்ளது எனலாம்.

பின்வரும் காரணிகள் எமது பிரதேசத்தில் விபத்துகளுக்குக் காரணியாக அமைகின்றன.

1. மதுபோதையிலும், புகைபிடித்துக் கொண்டும் வாகனத்தைச் செலுத்துதல்.

2. வீதி ஒழுங்கு விதிகளை மீறி, அளவுக்கு அதிவேகமாக வாகனத்தைச் செலுத்துதல்.

3. பிரதான வீதிகளில் வீதிப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வீதியின் இரு மருங்கிலும் வாகனத்தை நிறுத்தி வைத்திருத்தல், வாகனப்போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வீதியில் நின்று உரையாடுதல்.

4. வீதி ஒழுங்கு நடைமுறைகளை மீறி, பக்கம் பக்கமாக சமாந்தரமாக வாகனத்தைச் செலுத்திச்செல்லுதல்.

5. ஒரு வழிப்பாதையில் அல்லது சுற்று வட்டத்தெருக்களில் போக்குவரத்துத் திசைக்கெதிராக வாகனத்தைச் செலுத்திச்செல்லுதல்.

6. வாகனத்தைச் செலுத்திச் செல்வோர், வீதிகளைச் சரியாக அறிந்திராமை, வீதிகள் குண்டும் குழியுமாக அமைந்திருத்தல்.

7. சிறு வீதியொன்றிலிருந்து பிரதான வீதிக்குள் புகும்போது வேகமாகவும், கவலையீனமாகவும் வாகனத்தைச் செலுத்துதல், பிரதான வீதியிலுள்ள வாகனங்களுக்கு செல்லும் உரிமையுண்டு என்பதை சாரதிகள் அறிந்திராமை.

8. கிளைப் பாதையிலிருந்து, அல்லது ஒழுங்கையிலிருந்து வாகனத்தை பின் நோக்கி பிரதான வீதிக்குள் செலுத்துதல்.

9. இரவு நேரங்களில் வாகனத்தைச் செலுத்தும் போது, வெளிச்சத்தைக் குறைக்காமல் பிரதான விளக்கின் ஒளியைப் பாய்ச்சியவண்ணம் வாகனத்தை வேகமாக செலுத்துதல். இதனால், முன்னே எதிரில் வரும் வாகனச் சாரதிகளுக்கு ஒளித்தாக்கம் ஏற்படுகிறது என்பதை அறிந்திராமை.

10. பிரதான வீதிகளில் வீதிச் சைகைகள், வீதிக்குறியீடுகள், அபாய எச்சரிக்கைச் சைகைகள், ஒழுங்குபடுத்தும் சைகைகள் என்பன இடப்படாது இருத்தல்.

11. கையடக்கத் தொலைபேசியை உபயோகித்துக் கொண்டு, வாகனத்தைச் செலுத்துதல்.

12. பொறிமுறை ரீதியில் சீரற்ற வாகனங்களை வீதியில் செலுத்துதல். (உதாரணமாக - பொறிமுறைத் தடுப்புக்கள், ரயர்கள், விளக்குகள், ஒலிக்கருவிகள், காற்றுத்திரைத்துடைப்புக்கள், புகைகக்கிக் கொண்டு செல்லுதுதல் என்பன பொறிமுறை ரீதியில் சீரற்ற தன்மையிலிருத்தல்)

13. பாதசாரிகளும், வாகனத்தைச் செலுத்துவோரும் வீதி ஒழுங்கு முறைகள், விதிகள் என்பவற்றை சரியாக அனுசரித்து செயற்படாமையும், அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி அறிந்திராமையும்.

14. வயது குறைந்தோரும், சாரதி அனுமதிப்பத்திரம் பெறாதவர்களும் வாகனத்தைச் செலுத்திச் செல்லுதல்.

15. கட்டாக்காலி நாய்கள், மிருகங்கள் என்பன வீதியில் நடமாடுதல்.

16. துவிச்சக்கர வண்டியில் பிரயாணிப்போர் துவிச்சக்கர வண்டியை ஓட்டிச் செல்லும்போது, நகர்ந்து கொண்டிருக்கும் இன்னொரு வாகனத்தை அல்லது ஓடிக்கொண்டிருக்கும் மற்றுமோர் சைக்கிள் ஓட்டுபவரைப்பிடித்துக்கொண்டு செல்லுதல்.

17. மோட்டார் சைக்கிளில் பயணிப்போர் தலைக்கவசம் அணிந்து செல்லாமையும், ஒரு பக்கமாக அமர்ந்து பயணித்தல்.

மேற்குறித்த விடயங்களை வாகனத்தை செலுத்தும் சாரதிகளும், பாதசாரிகளும் கருத்திற்கொண்டு வீதி ஒழுங்கு விதிகளை சரியாக அனுசரித்து வீதியின் பாவனையை வாகனப்போக்குவரத்துக்கு ஒதுக்குவதன் மூலம், அதிகரித்துக் கொண்டு வரும் வீதி விபத்துக்கள், விபத்தினால் ஏற்படும் மரணங்கள், உடலுறுப்புக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளலாம்.

குறிப்பாக-

1. அபாய எச்சரிக்கைச் சைகைகள்.
2. ஒழுங்குப்படுத்தும் சைகைகள்.
3. மேலதிகச் சட்டங்கள்.
4. கட்டாயச் சைகைகள்.
5. சாரதிகளுக்குப் பயனுள்ள வேறு சைகைகள்.

முதலானவற்றைக் கருத்தில் கொண்டு அனைவரும் செயற்படல் அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



இரண்டாவது அகவையில்



பெயர் : க. கௌதமி
முகவரி : முடமாவடி.

நான்காவது அகவையில்



பெயர் : சி. சுபீஜன்
முகவரி : வேலணை.


# மேலும் ஒரு தொகுதிப் படையினர் விசேடபயிற்சியை முடித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவ நிரந்தர படைப்பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட படையினருக்கான ஆறாவது கட்ட விசேட காலாற்படை பயிற்சிநெறி நிறைவு நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

ஐந்து இராணுவ அதிகாரிகளும், 76 சாதாரண படையினரும் இந்தப் பயிற்சியை முடித்தனர். விசேட பயிற்சிகளைப்பெற்ற படையினர் வெளியேறும் நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை யாழ். குடாநாட்டுக்கான படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவின் தலைமையில் வாசாவிளான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில், யாழ். மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள 4ஆவது மற்றும் 7ஆவது காலாற்படை, 6-7ஆவது, 8ஆவது மற்றும் 10ஆவது இலகு காலாற்படைப்பிரிவுகள், 4ஆவது, 6ஆவது, 8ஆவது கெமுனு படைப்பிரிவுகள், 5-7ஆவது விஜய பாகு காலாற்படை, 4-9ஆவது கஜபாகு படைப்பிரிவுகளிலிருந்து தலா 9 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டிருந் தனர்.

இவர்களுக்கு 4ஆவது சமிக்ஞைப் பிரிவு, 6ஆவது பொறியியல் பிரிவு, பலாலி இராணுவ வைத்திய சாலை, பலாலி விமானப்படை முகாம் ஆகியவற்றில் முதற்கட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பின்னர் மின்னேரியாவிலுள்ள பீரங்கிப் பயிற்சிப் பாடசாலை, தியத்தலாவையிலுள்ள குறிப்பார்த்துச் சுடும் பயிற்சிப் பாடசாலை, மாதுரு ஓயாவிலுள்ள விசேட அதிரடிப்படை பயிற்சிப் பாடசாலை, ஊவா குடா ஓயாவிலுள்ள விசேட பயிற்சி முகாம்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கடந்த பெப்ரவரி 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த விசேட பயிற்சி நெறி மே 21ஆம் திகதி நிறைவு பெற்றது.

இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்திசெய்த படையினருக்கு, மேஜர் ஜெனரல் சுசில சந்திரபால சான்றிதழ்களையும், பதக்கங்களையும் வழங்கினார்.

# பொய்ச்சாட்சியம் அளித்த பெண்ணுக்கு இருவார சிறை

கொலை வழக்கொன்றில் பொய்ச்சாட்சியமளித்த பெண்ணை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச்சம்பவம் ஒன்று தொடர்பான வழக்கு விசாரணையின் போதே, பொய்ச்சாட்சியமளித்த லக்ஸ்மன் மல்லிகா என்ற பெண்ணையே 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

நேற்றுமுன்தினம் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது, பொய்ச்சாட்சியமளித்தவரின் உண்மை நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டதையடுத்தே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(தீ)

# நுணுக்குக்காட்டி பரிசோதகர் இன்மையால் பரிசோதனைகள் மேற்கொள்ள முடியாத நிலை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நுணுக்குக்காட்டிப் பரிசோதகர் இன்மையால், இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளமுடியாத நிலை தொடர்கின்றது.

காய்ச்சல் காரணமாக வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களிடமிருந்து, பரிசோதனைக்காக இரத்தம் எடுக்கப்பட்டு, பரிசோதனைக் கண்ணாடிகளிலே வைத்து, யாழ்ப்பாணம் சுகாதார பணிமனைக்கு அனுப்பி பரிசோதிக்கப்பட்டே நோயாளிக்கான மருத்துவ சேவையை வழங்கும் நிலை தொடர்கின்றது.

இதேவேளை, இவ்வாறு பெறப்படும் இரத்த மாதிரிகள் உடனுக்குடன் அனுப்பி வைக்க முடியாமையினாலும், சிலவேளைகளில் வாரமொருமுறைகூட அனுப்பப்பட்டு வருவது இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

போக்குவரத்து நெருக்கடிகள் மிகுந்த இந்தப் பிரதேச வைத்தியசாலையில் பரிசோதனைக்கான நுணுக்குக்காட்டிகள் உள்ளபோதும், அதற்கான ஊழியரை நியமிக்காமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(113)

# இலந்தைத்திடல் அம்மன் ஆலய மஹோற்சவம்

சாவகச்சேரி -சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இந்தமாதம் 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும்.

இந்த ஆண்டு இடம்பெறுவது - இந்த ஆலயத்தின் இரண்டாவது மஹோற்சவம் என்பது குறிப்பிடத்தக்கது.

யூலை மாதம் 3ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 4ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

மஹோற்சவக் கிரியைகள் யாவும் ஆலய பிரதமகுரு வேதாகம சோதிடபூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

(24)

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் திங்கள் முதல் வேலை நிறுத்தம்

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுள்ள பல்வேறு மோசடிச் சம்பவங்களை வெளிப்படுத்தும் வகையிலும், தமது அடிப்படை வசதிகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றதை எதிர்த்தும் நாளை முதல் யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த காலங்களில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு ஊழியர்களின் நலன்கள் தொடர்பாக அனுப்பிய கடிதங்கள் எதற்கும், இதுவரையில் எதுவித பதிலும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கும் ஊழியர் சங்கத்தினர் - தமது கோரிக்கைகளுக்கு உடனடியாக சரியான தீர்வு கிடைக்கவேண்டும் என்றும்,

பல்கலைக்கழகத்தினுள் ஊழியர் சங்கத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும்,

பல்கலைக்கழகத்தின் பல்வேறு தரப்பிலும் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள் தொடர்பாக உடன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்றும்,

துணைவேந்தர் உட்பட அனைவருமே பல்வேறு மோசடிகளில் ஈடுபடுகின்றமை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

# வலி. கிழக்கு தெற்கு வீதி புனரமைப்புக்கு நிதியுதவி

வலி.கிழக்கு மற்றும் வலி தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட 12 கிலோ மீற்றர் நீளமான வீதிகளைத் திருத்த, நிகொட் நிறுவனம் 120 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

கார்ப் திட்டத்தின் கீழ், நிகொட் நிறுவனம் செயற்படுத்திவரும் பணிகளில் ஒன்றாகவே இந்தப் பணி அமையவுள்ளதாக யாழ். செயலக நிகொட் நிறுவனப்பெரும் திட்டமிடல் அதிகாரி தெரிவித்தார்.

இந்தத்திட்டத்தின் கீழ் கொலனி ஸ்கீம் வீதி, சிறுப்பிட்டி விளையாட்டு மைதான வீதி, கோப்பாய் கருத்தோலை வீதி, ஆவரங்கால் சந்தை வீதி, நிலாவரை எல்லாளன் வீதி, தாவடி இந்து மயான வீதி, தம்பனை வீதி, ஏழுகோவில் வீதி, மயிலணி முதலாம் குறுக்குத் தெருவீதி, குமாரலிங்கம் வீதி, கிளுவங்கட்டைவீதி முதலியனவையே புனரமைக்கப்படவுள்ளன.

இவற்றைப் புனரமைப்பதற்கான கேள்விகள் கோரப்பட்ட பின்னர் விரைவான சேவைகள் மூலம், இந்த வீதிகள் புனரமைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு வசதி செய்து கொடுக்கும் முகமாக,, இந்த வீதி புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# மண் இலையானைக் கட்டுப்படுத்த நெடுந்தீவில் மருந்து விசிறப்படும்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் மக்களைத் துண்புறுத்திவரும் நிலப்பூச்சி (மண் இலையான்)யின் பெருக்கத்தையும், தாக்கத்தையும் கட்டுப்படுத்தும் நோக்குடன், இலங்கை நுளம்புக் கட்டுப்பாட்டு இயக்கத்தினர் நெடுந்தீவுக்கு வருகை தரவுள்ளனர்.

எதிர்வரும் 16, 17, 18ஆம் திகதிகளின் முறையே நெடுந்தீவு கிழக்கு, மத்தி, மேற்கு ஆகிய பகுதிகளில் இரவு 9 மணிக்குப் பின்னர் பரீட்சார்த்தமாக மருந்துகள் விசிறும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இவ்வாறு, மருந்து விசிறும் வேளையில் பொது மக்கள் தங்கள் வீடுகளின் கதவு, யன்னகளை திறந்து வைப்பதுடன், உணவுப் பண்டங்களைப் பாதுகாப்பாக மூடிவைத்து, குடியிருப்பாளர்கள் வீட்டுக்கு வெளியே நிற்குமாறும், மருந்து விசுறும் நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் நெடுந்தீவு பொது சுகாதாரப் பரிசோதகர் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(113)



# விளையாட்டு அரங்கம்

## யாருக்காகவும் நிற்கமாட்டார்கள்

அவுஸ்ரேலிய முதன்மை வேகப்பந்து வீச்சாளர் கிளென் மக்ரா கடந்த ஒரு வருடமாக கிரிக்கெட் ஆட்டத்தில் இல்லை. காரணம் உபாதைகள். இதே போலத்தான் பிரெட்லீயின் நிலையும்.

மறுபுறம் நியூஸிலாந்தின் முதன்மைப் பந்துவீச்சாளரான ஷேன் பொண்டின் நிலையும் இதுவே. ஆனால், இவர்களை சம்பந்தப்பட்ட கிரிக்கெட் சபைகள் அந்த உயர் அந்தஸ்திலேயே வைத்துள்ளன என்பது என்னவோ உண்மைதான்.

ஆனால், இதில் இன்னொரு விடயத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும். இவர்களின் இழப்பை ஈடுசெய்ய இரண்டாம் மூன்றாம் தரவரிசை வீரர்கள் வரிசையில் நிற்கிறார்கள் என்பதுதான் அது.

அதற்கப்பால் இவர்களே தற்போது முதன்மை நிலை வீரர்களுக்கு ஆபத்தானவர்கள் ஆகிவிட்டதுதான். முதன்மை வீரர்களைப் பயமுறுத்துகிறது.



கிளென் மக்ரா "எனக்கே சவாலா"

தற்போதைய செய்தியொன்று இதனை உறுதிப்படுத்துவது போலத்தான் தெரிகிறது. அதாவது அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பிரதம தெரிவாளர் ட்ரெவர் ஹோஹன், அவுஸ்ரேலிய முதன்மை வேகப்பந்துவீச்சாளர் கிளென் மக்ரா பற்றிக் கருத்துக் கூறுகையில்- அவுஸ்ரேலிய, இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டு டெஸ்ட் போட்டித் தொடர் கிளென் மக்ராவைப் பொறுத்தவரையில் மிகமுக்கியமானதாக அமையப் போகின்றது என்கிறார்.

அவருக்கு அணியில் இடம்பெறுவது என்பது பெரும் கஸ்டமானதல்ல. ஆனால், இந்தத் தொடர் அவருக்கு 'தீமானத்துக்கு' உரியது என்று பயமுறுத்துகிறார். இன்னொரு வகையில் கூறப்போனால், டார்வின் மற்றும் கெயின்ஸ் நகரங்களில் நடைபெறப் போகும் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் பந்து வீச்சில் தன்னை நிரூபிக்காவிட்டால் அவரது டெஸ்ட் எதிர்காலம் நிச்சயமற்றதொன்றாகும் என்பதே பெறப்படும் கருத்து.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் நிர்வாகிகள் கிளென் மக்ரா இல்லாவிட்டால், அவுஸ்ரேலிய அணி நிலையில் இல்லை. எந்தவொரு தனிமனிதனும் அணியின் பெறுபேற்றை நிர்ணயிக்கும் நிலை கிடையாது என்பது போல சிந்திக்கிறார்கள்.

இது தனிச்சையான சிந்தனை யல்ல. ஆரோக்கியம் நிறைந்த, தன்னம்பிக்கையுடன் கூடிய சிந்தனை. அந்தச்சிந்தனை வெளிப்பாட்டுக்குக் காரணம் 'அந்த மாதிரி' திட்டமிட்ட வகையில் கிரிக்கெட் அணி வளர்க்கப்பட்டதுதான்.

அதாவது, முதன்மை நிலையில் பேசப்படுபவர்கள் விளையாட முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில், அடுத்த நிலை வீரர்கள், முதன்மை நிலை வீரர்களுக்கு ஈடாக விளையாடி இடைவெளி நிரப்பி விடுகிறார்கள்.

ஆகவே இன்றைய நிலையில் கிளென் மக்ரா அதி உயர்பட்சத் திறமை காட்டாத பட்சத்தில் - அவர் அணியில் இடம்பெறமுடியாது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

பின்னால் பிரெட்லீ ஜிலெஸ்பி, பிரக்கன், பிரட் வில்லியம்ஸ், கஸ்பரோவிச் என்று நாம் அறிந்த பெயர்களுடன் - இதோ இன்னொரு பெயர் ஷோன் டெய்ட். மக்ரா இல்லாவிட்டால் என்ன.

இவர்கள் அவுஸ்ரேலிய அணிக்கான வெற்றிகளைத் தொடர்ந்தும் பெற்றுக் கொடுத்துக் கொண்டுதானே இருக்கிறார்கள். என்றாலும், கிளென் மக்ரா இலகுவில் விட்டுக்கொடுக்கக்கூடியவர் அல்ல.

வெல்லப்போவது யார்? 95 டெஸ்ட் போட்டிகளில் 430 விக்கெட்டுகள் பெற்றுள்ள நிலையில் கிளென் மக்ரா தோற்பவர் அல்ல என்பது மட்டும் உண்மை.

- மக்டலின்

## கண்பட்டுப் போனதுவோ



செரினா, வீனஸ் " இரு நிலவுகள்"

அடுத்தமாதம் ஆரம்பமாகப்போகிறது விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகள். ஒரு ரெனிஸ் வீரனின் - வீராங்கனையின் கனவே விம்பிள்டனில் கிண்ணம் வெல்வதுதான்.

ஆனால், பெல்ஜியத்தின் நட்சத்திர வீராங்கனைகள் ஹெனின் மற்றும் கிளிஸ்ரர்ஸ் இருவரும் தங்கள் உபாதைகள் காரணமாக விம்பிள்டன் போட்டிகளில் கலந்துகொள்வதில்லை என்று அறிவித்துவிட்டார்கள்.

என்ன துயரம் என்று எல்லோரும் கவலைப்படுகிறார்கள். உலகின் முதலாம், இரண்டாம் தரவரிசையை தம்மகத்தே கொண்டிருக்கும். பெல்ஜிய வீராங்கனைகள் இல்லாமல் விம்பிள்டன் சோபிக்குமா?

கடந்த சில காலமாக இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த ஜுலையில் செரீனா வில்லியம்ஸ் தனது சகோதரி வீனஸ் வில்லியம்ஸைத் தோற்கடித்துப் பட்டம் வென்றார். அதன்பின் நடைபெற்ற நான்கு **GRAND SLAMS** போட்டிகளிலும் முதல்பத்து தரவரிசைக்குட்பட்ட வீராங்கனைகள் கலந்துகொண்டதாக இல்லை. காரணம் காயங்கள், உபாதைகள். இதுதான் துயரம்.

2003 அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டிகளில் இரு சகோதரிகளும் முற்றாகவே பங்குகொள்ளவில்லை - காரணம் காயங்கள். இந்தவேளையில்தான் அந்த இடைவெளியைப் பயன்படுத்தி பெல்ஜியப் பெண்மணிகள் ஹெனின் மற்றும் கிளிஸ்ரர்ஸ் இருவரும் முதன்மைக்கு வந்தார்கள். ஹெனின் தன்னாட்டவரான கிளிஸ்ரசை அமெரிக்கா மற்றும் அவுஸ்ரேலியா ஓபன் போட்டிகளில் தோற்கடித்து கிண்ணம் வென்றார்.

ஆனால், பதினொரு மாதங்கள் மட்டுமே கழிந்தன. இந்த இருவரும் உபாதைகள், காயங்களால் பெரும் அவஸ்தைக்கு உள்ளாகி விட்டார்கள். ஹெனின் பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டிகளில் இரண்டாம் சுற்றிலேயே தோல்விகண்டார். காரணம் பூரணமான சுகநிலை இன்மை. கிளிஸ்ரர்ஸ் பங்குகொள்ளவேயில்லை - காரணம் உபாதைகள். மேலும் மணிக்கட்டில் சிறிய சத்திரசிகிச்சை ஒன்று நடைபெறவுள்ளதால் அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டிகள் ஆவணி மாதம் நடைபெறும்போது, கிளிஸ்ரர்சை அங்கும் காண முடியாமல் இருக்கும்.

வில்லியம் சகோதரிகள் 1990 - 2003 காலப்பகுதியில் பத்து **GRAND SLAMS** பட்டங்களை வாரியள்ளிக்கொண்டவர்கள். ஆனால், அவர்கள் பூரண தேகசுகத்துடன் இல்லை. அதேபோன்ற நிலை பெல்ஜியம் ஜோடியைப் பொறுத்தும் காணப்படுகிறது. எனவே, புதுமுகங்கள் பட்டங்களுக்காக போட்டியிடும் நிலையில் விம்பிள்டன் பசும்புற்றரைகள் பாலைவனம்போல தோற்றமளிக்கும் என்றே தெரிகிறது.

- விமலன்

## இவர்களை - நினைத்தாலே - இனிக்கும்

இந்தியக் கிரிக்கெட் அணி - பாகிஸ்தான் மண்ணில் வைத்தே பாகிஸ்தானைத் தோற்கடித்ததும், பாகிஸ்தானில் ஏற்பட்ட புயல் எல்லோரையுமே அடித்துக்கொண்டு போய்விடுமோ என்ற அச்சமே ஏற்பட்டது.

ஆனால், அப்படியெல்லாம் இல்லாமல் - மியன்டட், ரமீஸ்ராஜா, இன்ஸமாம்-உல்-ஹக் எல்லோரும் அந்தந்த இடத்திலேயே நிற்பது ஒரு ஆறுதலாக இருந்தது. ஆனால், சோகைப் அக்தர் மட்டுமே சங்கடத்துக்கு உள்ளாகி இருப்பதை அறிய முடிகிறது.

இன்னொருபுறம் நிதானமடைந்த பாகிஸ்தான் கிரிக்கெட்சபை- பாகிஸ்தான் கிரிக்கெட்டை மெருகூட்ட, புடம்போட ஆவன செய்யப் புறப்பட்டிருப்பது மிக ஆரோக்கியமான செயற்பாடாகத் தெரிகிறது.

இந்தவகையில் தான், தென்னாபிரிக்காவின் பாரி றிச்சட்ஸ் - பாகிஸ்தான் கிரிக்கெட்சபையால் லாகூரில் அமைந்துள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியின் ஆலோசகராக அமர்த்தப்பட்டுள்ளார்.

பாரி றிச்சட்ஸ 1969-1970 ஆம் ஆண்டுகளில் தன் நாட்டுக்காக நான்கே நான்கு டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடிய மகத்தான துடுப்பாட்ட வீரராவார்.

தென்னாபிரிக்க வெள்ளை இன அரசின் இனவாதக் கொள்கை காரணமாக, தென்னாபிரிக்கா சர்வதேசக் கிரிக்கெட் விளையாடுவதிலிருந்து தடைசெய்யப்பட, அதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட பலருள் இவரும் ஒருவர். பின்னர் இவரது தாகத்துக்குத் தண்ணீர் ஊற்றியது இங்கிலாந்துக் கவுண்டிகளே.

இத்தகைய ஒருவரை மிகுந்த சிரமத்தின் பின் ஒருமாத காலத்துக்கு ஒப்பந்தம் செய்துகொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் உயர் அதிகாரி ரமீஸ்ராஜா தமது கருத்தினைக் கூறும்போது -

இவர் பாகிஸ்தானில் நிற்கும் காலம் தேசிய அக்கடமிக்கு மட்டுமல்ல, எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் நிகழ்வாகவும் இருக்கும் என்றும் கூறியிருக்கிறார்.

இதற்கு முன்னதாகவே கடந்த மாதம் இன்னொரு கிரிக்கெட் ஜாம்பவான், அவுஸ்ரேலியாவின் முன்னாள் தலைவரும், துடுப்பாட்ட நிபுணருமான கிரெக் சப்பல் இவரும் ஒரு மாத காலம் பாகிஸ்தான் வந்து, தன் ஆலோசனைகளை வழங்கப்போகிறார்.



பாரி றிச்சட்ஸ் "தவறவிட்டு விட்டோம்"

தன் மனதில் பட்டதை பளிச்சென்று கூறும் சுபாவம் உள்ளவர் இவர். ஆனால், மறக்கமுடியாதபடி இன்றும் மதிப்பு வாய்ந்த கிரிக்கெட் வீரரும்கூட.

எமது பிரதான பின்னடைவு அணியின் துடுப்பாட்டம் தான். துடுப்பாட்ட நுட்பங்களைப் பொறுத்து நிறையப் பலவீனங்கள் உள்ளன. இந்த இரு ஜாம்பவான்களையும் பயன்படுத்துவதன்மூலம், நிறைந்த வழிகாட்டல்களை எமது வீரர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்று திருப்திப்படுகிறார் ரமீஸ் ராஜா.

அதுமட்டுமன்றி, இவர்கள் இருவரும் கிரிக்கெட் தொடர்பான பல்துறை விற்பன்னர்கள். இவர்கள் இணைந்து பாகிஸ்தான் மண்ணுக்கேற்ற பயிற்சி முறைகளையும் எடுத்துக்காட்டுவார் என்று நம்புகிறார் அவர்.

பாகிஸ்தான் அணி என்பது - என்றுமே சர்வதேச கிரிக்கெட்டில் தனக்கென ஒரு தடம் பதித்தே வந்துள்ளது.

தற்போது ஒரு தளர்வு நிலை காணப்பட்டாலும்கூட பாகிஸ்தான் கிரிக்கெட்டில் காலங்காலமாகக் காணப்படும் நிர்வாகச் சிக்கல்தான் அதற்குக் காரணம்.

அவர்கள் உலக அரங்கில் தலைநிமிரும் காலம் வெகுதூரத்தில் இல்லை. அதற்குத் தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட்சபை எடுத்துவரும் நடவடிக்கைகள் நல்ல உதாரணம். பாகிஸ்தானில் வளத்துக்குக் குறைவில்லை, இனி வளர்ச்சிக்கும் குறைவிருக்காது.

- ஜோசப் கிருஷ்ணா

தனிப்பட்ட ரீதியில் நான் பல பதக்கங்களை வென்றுள்ளேன். அவை எல்லாம் இந்நாட்டு மக்களுக்குச் சமர்ப்பணம் என்று கூறி விடைபெறுகிறார் இலங்கையின் 100 மீற்றர் தடைதாண்டல் வீராங்கனை சிறியானி குலவன்ச.



சிறியானி குலவன்ச "நீங்கள் தனித்துவமானவர்"

தற்போது அவருக்கு வயது 34. ஆனால், ஓகஸ்ட் ஒலிம்பிக் போட்டிகள், அடுத்த வருடம் இலங்கையில் நடைபெறவிருக்கும் **SAF** விளையாட்டுக்கள் இரண்டு நிகழ்ச்சிகளிலும் சிறியானி பங்கேற்க எதுவித தடையும் இல்லை. ஆனால், அதற்குள் அவசரப்பட்டு ஏன் ஓய்வு பெறும் முடிவை எடுத்தார்?

அவர் மிகத்தெளிவாகவே இருக்கிறார். பலவாறு சிந்தித்து, எவ்வித தயக்கமும் இல்லாமல் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். எனக்கு இதில் எந்த வருத்தமும் இல்லை என்பவர் - எனது விளையாட்டுத்துறைக் காலத்தில் நான் யாரையாவது புண்படுத்தியிருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள் என்கிறார்.

மனதில் பட்டதை வெளிப்படையாக எடுத்துக் கூறும் இந்த வீராங்கனை - தனது பத்தொன்பது வயதில் தேசிய அணிக்குள் உள்வாங்கப்பட்டார். ஒரே நேரத்தில் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், தடகளப் போட்டிகள் என்ற மூன்று துறைகளிலும்

## கண்ணீரும் கதை சொல்லும்

தேசிய மட்டத்தில் தெரிவாகியவர். தனது விருப்பத்தை 100 மீற்றர் தடைதாண்டலில் செலுத்தினார்.

ஐந்து **SAF** போட்டிகள், நான்கு ஆசிய சம்பியன் ஷிப் போட்டிகள், மூன்று ஆசியப் போட்டிகள், இரண்டு பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான போட்டிகள், ஐந்து உலக சம்பியன் ஷிப் போட்டிகள், மூன்று ஒலிம்பிக் போட்டிகள் என்று தொடர்ந்து 1991 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை **SAF** போட்டிகளில் தொடர்ந்து தங்கம், மிகச்சிறப்பாக கோலாலம்பூரில் நடைபெற்ற பொதுநலவாயப்போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் பெற்ற கணங்கள் உட்பட - இவரது கைகளில் நிறையப் பதக்கங்கள் என்று பிரமிப்புடன் நீண்டு செல்கிறது.

நான் எனது விளையாட்டு வாழ்க்கையில் நிறையவே அழுதவள்.

கழுத்தறுப்புக்கள், துரோகிகள்... என்பவர் இப்போது தனது விடைபெறும் உரையில் கண்ணீரைத் தடுக்கமுடியாமல் தவிக்கிறார். இவர் விடைபெறும் நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர், முன்னாள் இலங்கைக் கிரிக்கெட் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க இருவரும் கலந்து கொண்டது சிறியானி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த வீராங்கனை என்பதற்கு நல்ல உதாரணம்.

இறுதியாக எந்த ஒரு உயர் தகைமை கொண்ட விளையாட்டுத்துறை வீர வீராங்கனையும் - எவ்வளவோ மனத் துன்பங்களுடனேயே தமது விளையாட்டு வாழ்வை கொண்டு நடத்தியிருக்கிறார்கள்.

இதற்கு சிறியானி குலவன்சவும் விதிவிலக்கல்ல. இப்பொழுதுள்ள நிலை சிறியானியின் நிகழ்வான 100 மீற்றர் தடைதாண்டலில், இவரை ஈடுசெய்ய இந்த நிமிடத்தில் இலங்கையில யாரும் இல்லை.

இந்த இடைவெளியை நிரப்புவது எப்படி? - நந்தா

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# பார்த்திருந்தால் பரவசம்

அண்மையில் ஒரு பரபரப்பான கிரிக்கெட் போட்டியொன்றை கண்டு ரசிக்கக் கூடியதாக இருந்தது. உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளின் வரலாற்றில் பதிவுசெய்யப்பட வேண்டிய ஒரு போட்டியாக அது அமைந்திருந்தது. இந்தப்போட்டி சர்வதேச விளை



யாட்டு மைதானம் ஒன்றில் நடைபெற்றிருந்தால், அது பதிவுசெய்யப்பட்டிருக்கும். மீண்டும் மீண்டும் அந்தப்போட்டியை ஒளிபரப்புச்செய்து, கிரிக்கெட் போட்டியில் விரைவான ஓட்டங்களைப் பெறுவது எவ்வாறு எனக் காட்டியிருப்பார்கள்.

யாழ்.பல்கலைககழக மைதானத்தில் தான் இந்தப்போட்டி நடைபெற்றது. கடநத ஞாயிறன்று மாலை இடம்பெற்ற இந்தப் போட்டியை கண்டுரசித்தவர்கள் மிகச் சிலரே.

ஏனைய கிரிக்கெட் ரசிகர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்காமல் போனமை துரதிஷ்டமே. யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றுவரும் நான்கு அணிகளுக்கு இடையேயான சுற்றுப்போட்டிகளில நடைபெற்ற ஒரு போட்டியையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக அணி, சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி, கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி ஆகிய நான்கு அணிகளுக்கு இடையிலான போட்டித்தொடரில் - நடைபெற்ற ஒரு போட்டியே இந்தப்போட்டியாகும்.

குறித்தபோட்டி யங்ஸ்ரார் அணிக்கும், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணிக்கும் இடையே நடைபெற்றது. 30 ஓவர்களைக்கொண்ட இந்தப்போட்டியில் முதலில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி துடுப்பெடுத்தாடியது.

நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்களில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து, 245 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்த ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்தவர்கள் வரிசையில்- சபானந்த் அடித்த அரைச்சதம் முக்கியமானது. கொக்குவில் விளையாட்டுக்கழக அணியினர் - யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியின் பந்துவீச்சுக்களை துவம்சம் செய்தனர்.

பந்து நிலத்தில் உருண்டுசென்று, எல்லைக கோட்டைத் தாண்டியபடி இருந்தது. எல்லைக் கோட்டுக்கு மேலாக, மைதானத்தில் விழமாட்டேன் என்று கூறினாற்போல் சிக்சர்களாகவும் சென்றுகொண்டிருந்தது.

கொக்குவில் சனசமூக நிலைய அணியினர் பெற்ற இந்த ஓட்ட எண்ணிக்கையை எட்டுவதென்பது சுலபமான ஒன்றாக ரசிகர்கள் கணிக்கவில்லை. கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, மைதானத்தில் களத்தடுப்புக்குச் செல்லும்போது, தமக்கே வெற்றியென்று கருதிச் சென்றிருந்தால், அதில் நியாயம் இருந்தது.

யங்ஸ்ரார் அணி 246 என்ற இலக்கை அடைவதற்காக களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீர்களான துஷ்யந்தன், ரஜித் ஆகியோர் களத்தில் இறங்கினர். எதிரணியின் பந்து வீச்சாளர்களைத் திணறடித்தனர். வீசப்பட்ட பந்துகள் யாவும் ஓட்டங்களாகவே சென்றுகொண்டிருநதன.

8 ஓவர்களில் 100 ஓட்டங்களை யங்ஸ்ரார் பெற்றுக்கொண்டது, நல்லதொரு அடித்தளமாக அமைந்தது. இந்த நிலையில் 47 ஓட்டங்களுடன் துஷ்யந்தனும், 41 ஓட்டங்களுடன் ரஜித்தும் ஆட்டமிழந்தனர். புதிதாக நுழைந்த ஆட்டக்காரரும் ஓட்டமெதுவும் பெறாதநிலையில் ஆட்டமிழந்தார். மூன்று விக்கெட்டுக்களை இழந்த நிலையில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வெற்றி வாய்ப்பை இழந்துவிடுமோ என்ற ஏக்கத்தில் ரசிகர்கள் இருந்தனர். களமிறங்கினார் விஜய கர்ணன் அடுததடுத்து பவுணடரிகளாக விளாசினார். மறுபுறம் சசிவர்மன் நிதானமாக ஓட்டங்களை எடுத்துக்கொண்டிருந்தவர் - அடித்து ஆட முற்பட்டு ஆட்டமிழந்தார்.

பின்னர் சென்ற புதிய வீரரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். ஐந்து விக்கெட்டுக்களை இழந்தநிலையில் வெற்றிபெறக் கூடிய அடித்தளத்தில் களமிறங்கினார் டினேஸ்.

கர்ணனுடன் ஜோடிசேர்ந்த இவர் - யங்ஸ்ரார் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச்சென்றார். 29.2 ஓவர்களில் 246 ஓட்டங்களை 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து, போட்டியில் வெற்றிபெற்றது.

கர்ணன் 81 ஓட்டங்களையும், டினேஸ் 41 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். இறுதிப்போட்டியில் யாழ். சென்ரலைட்ஸ்கழக அணியுடன் விளையாடும் தகுதியைப் பெற்றது யங்ஸ்ரார் அணி. 30 ஓவர் போட்டி ஒன்றில், பெற்ற அதிகூடிய ஓட்டமாகவும், பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய 246 ஓட்டங்கள் எண்ணிக்கையை அடைந்த போட்டியாகவும் குறைந்த ஓவர்களில் 100 ஓட்டங்கள் பெற்ற சாதனையை நிலைநாட்டிய போட்டியாகவும் இப்போட்டி அமைந்தது.

மிகவும சிறப்பான இந்தப்போட்டியை கண்டு களித்தவர்கள் நிச்சயமாக இரவு தூங்கியிருக்கமாட்டார்கள் என்றால், விளையாடியவர்களின் மனநிலையைக் கூறத்தேவையில்லை.

# இன்று புதிதாய்ப்



மிஸ்கீனா
"நீ ஒரு முழுநிலா"

பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டிகள் ஆரம்பித்த போதே, இம்முறை மகளிர் ஒற்றையர் மற்றும் ஆடவா ஒறறையர் போட்டிகளில் யார் சம்பியன் பட்டம் வெல்வார்கள் என்ற ஊகங்கள் சிக்கலுக்குரியதாகவே இருந்தன. அதிலும் மகளிர் ஒற்றையர் போட்டிகள் தொடர்பில் பிரபல்ய வீராங்கனைகள் கலந்துகொள்வார்களா இல்லையா? என்ற நிலையில் இன்னும் ஊகங்கள் கூடுதலாக இருந்தன. இந்த வகையில் ஏதாவது ஊகங்கள் இருந்திருந்தால், அவை எல்லாமே தவிடு பொடியாகிப் போன தன்மையையே காணமுடிந்தது.

ஏற்கனவே வாசகர்கள் அறிந்தது போல இரு பிரிவிலும் முன்னணித் தலைகள் எல்லாமே உருண்டோட, அற்புதமாக, அதேபோல ஆச்சரியமான முறையில் இரணடு பிரிவு இறுதி ஆட்டங்களும் எதிர்பாராத சுவாரஸ்யமானதாக அமைந்தது. மகளிர் ஒற்றையர் போட்டிகளில் ரஷ்யநாட்டு வீராங்கனைகளே இறுதிப் போட்டியில் களமிறங்கினர். அதேபோல ஆடவர் ஒற்றையர் போட்டிகளின் இறுதியாட்டத்துக்கு ஆர்ஜென்ரீன வீரர்கள் இருவரே தகுதி பெற்றனர்.

அது மட்டுமல்ல 2004 ஆம் ஆண்டு பிரெஞ் ஓபன் புதுமுகங்களை, புகழின் உச்சிக்கு கொண்டு சென்ற பெருமையையும் தட்டிச் சென்றுவிட்டது.

# பிறந்தோம்

மகளிர் ஆட்டம் பொறுத்து, பிரெஞ் ஓபன ரெனஸ் 107 வருட வரலாற்றிலே முதன் முறையாக சம்பியன் பட்டம் வென்றவராகிறார் அனஸ்ரயா மஸ்கினா. இவர் தன் சக நாட்டவரான எலினா டெமண்டினாவை 6-1, 6-2 என்ற செட்கணக்கில் வென்றார். ஆரம்பத்தில் இருந்தே மிஸ்கினா - அதிரடியாகவே ஆடத்தொடங்கி இறுதிவரை ஓயவேயில்லை. என்றாலும், அரை இறுதிப் போட்டியில் கெப்ரியாட்டியை வெனறதுததான் திருப்புமுனை. பொதுவான எதிர்பார்ப்பு இறுதிக்கட்டத்தில் ஜெனிபர் கெப்ரியாட்டி பககம் சென்றாலும். புரட்சிகரமாக மிஸ்கினா வென்றார். இது சமபியன் பட்டம் அவருக்கே எனற உறுதியையும் கொடுத்துவிட்டது. ரஷ்யாவின் வெண்புறாக்கள் தொடர்பான ஒற்றுமைகள் சில. இருவரும் மொஸ்கோவில் பிறந்தவர்கள். இருவருமே 22 வயது நிறைந்தவர்கள். இருவரும் ஒரே பாடசாலையில் கல்வி பயின்றவர்கள். இருவருமே உலகின் பலமான வீராங்கனைகளை மண்கௌவ வைத்து, முதலாம் இரண்டாம் இடங்களை ரஷ்யாவிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார்கள்.

மறுபுறம் அகாஸி, பெடரர் ஹெவிட், கார்லோஸ்மோயா போன்ற பெரும் பெரும் கைகள் எல்லாம் நிலைகுலைந்து போக, தென் அமெரிக்கக் கண்டத்தின் ஆர்ஜென்ரீனா நாட்டிலிருந்து இரண்டு வீரர்கள் பிரான்சில் வந்திறங்கி புரட்சி செய்துவிட்டார்கள்.

இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற ஆர்ஜென்ரீனா வீரர்கள் கெஸ்ரன் காடியோ மற்றும் கில்லர்மோ கோரியா. காடியோ மற்றும் கில்லாமோ கோரியா இவர்கள் 27 வருடங்களுக்குப் பின் பிரெஞ் ஓபன் ரெனிஸ் இறுதிப்போட்டியில் பங்கு கொள்ளும் ஆர்ஜன்ரீன நாட்டுவீரர்கள் என்ற பெருமையையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

பொதுவாக கோரியா- ஆடவர் ஒற்றையர் போட்டியில் காடியோவை இலகுவாகத் தோற்கடிப்பார்கள் என்றே எதிர்ப்பார்க்கப்பட்டது. ஏனெனில், இருவரின் சாதனைகள் இந்த விபரத்தையே எடுத்துக் கூறின.

ஆனால், எதிர்பார்க்காமல் ஏற்பட்ட தசைப்பிடிப்பு - கோரியாவின் ஆட்டவேகத்தை கட்டிப்போட்டுவிட காடியோ எதிர்பாராமல் கிண்ணத்தை வென்றுவிட்டார். முதல் இரண்டு செட்களிலும் வெற்றி பெற்ற கோரியோ - அடுத்த மூன்று செட்களும் காடியோவிடம் செல்லும் என்று எண்ணியிருக்கமாட்டார். நினைப்பதெல்லாம் நடப்பதில்லை என்பது உண்மைதான். என்றாலும், இருவருக்கும் ஒரு சந்தோஷம் - அதாவது தமது தாயகமான ஆர்ஜன்ரீனாவுக்கு முதல் இரண்டு இடங்களும் கிடைத்தது என்ற மகிழ்ச்சியே அது.

# சங்கமிக்கும் வல்லரசுகள்

எதிர்வரும் ஜுலை மாதத்தினைப் பொறுத்த வரையில் கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரும் கொண்டாட்டம். அதுவும் இலங்கை, இந்திய ரசிகர்களைப் பொறுத்தவரையில் இரட்டிப்பு மகிழ்ச்சியே. காரணம் -ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இலங்கையில் ஆரம்பிக்கின்றமையே.



பாலாஜி
"இளைய நிலா"

இலங்கையில் இடம்பெறவுள்ள ஆசியக் கிண்ண போட்டியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஹொங் கொங், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பங்களாதேஷ் ஆகிய அணிகள் கலந்துகொள்கின்றன.

போட்டியில் பங்குகொள்ளும் அணிகளில் இந்தியா, இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியன ஒரு குழுவாகவும் - பாகிஸ்தான், பங்களாதேஷ், கொங் கொங் ஆகிய அணிகள் ஒரு குழுவாகவும் பிரிக்கப்பட்டு, முதல் லீக் முறையில் போட்டிகள் இடம்பெறுகின்றன.

ஒவ்வொரு குழுவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறும். இரண்டாம் சுற்றைப் பொறுத்தவரையில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகள் தகுதி பெறும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

ஆனால், ஒகஸ்ட் முதலாம் திகதி இடம்பெறவுள்ள இறுதிப் போட்டியில் மோதப்போகும் அணிகள் எவை? அதிலும்வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரிக்கும் அணி எது? என்பதே ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும்.

இலங்கை, பாகிஸ்தான், இந்திய அணிகளைப் பொறுத்தவரையில், சமஅளவிலான பலத்தினையே கொண்டுள்ளன. எனவே, வெற்றிக் கிண்ணத்தினை வெல்வதற்காக இம் மூன்று அணிகளும் கடும் சவால்களை எதிர்நோக்க வேண்டும்.

இலங்கை அணியைப் பொறுத்தவரையில், ஆசியப் போட்டிகளில் சூடுகண்ட பூனைகளாகவே உள்ளனர். 2000 ஆம் ஆண்டு இறுதியாக பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடந்த இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியிடம் 39 ஓட்டங்களால் இலங்கை அணி தோல்வியைத் தழுவியிருந்தது. மேலும் மினி உலகக் கிண்ணப்போட்டி மற்றும் சார்ஜா போட்டிகளில், இந்தியா, பாகிஸ்தான் அணிகளுடன் சோபிக்காத இலங்கை அணி - இந்தப் போட்டியில் தனது களங்கத்தைப் போக்க போராடும் என்பதில் ஐயமில்லை. மேலும் அண்மையில் இலங்கை அணியின் துடுப்பாட்டம் பிரகாசமாக இருப்பதாலும், இலங்கை அணியின் அதி சிறந்த பந்துவீச்சாளர்களும் ஏனைய அணிகளுக்குச் சவாலாக அமைவர் என்பதில் ஐயமில்லை.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் பாகிஸ்தான் தொடரை வென்றதன் பின்னர் - ஓய்விலே இருக்கின்றார்கள். எனவே, உளவியற் பலத்தோடு இருந்துகொண்டு, உலகச் சம்பியனான அவுஸ்ரேலியாவிற்கே சவால் விடும் இந்திய அணி - இந்தத் தொடரில் மிகச் சிறப்பாக விளையாடும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. டெண்டுல்கர், ஷேவாக் ராவிட், கங்கூலி, லக்ஸ்மன், யுவராஜ்சிங் என துடுப்பாட்டப் பட்டாளமே உள்ள இந்திய அணியைப் பொறுத்த வரையில், பந்துவீச்சுப் பலம் சொல்லிக் கொள்ளக்கூடியளவிற்கு இல்லை. பதான், பாலாஜி என்கின்ற இருவருமே இந்திய அணியின் பந்துவீச்சுப் பலம். ஆனால் இநதிய அணி இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் கடும் சவாலைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

பாகிஸ்தான் அணியைப் பொறுத்த வரையில், இந்திய அணியிடம் சொந்த மண்ணில் மண்கௌவிய தழும்புகளுடன் உள்ளனர். எனவே, தமது கௌரவத்தை நிலைநாட்ட போராடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அக்தர், சமி, சபீர் அகமட், போன்ற சிறந்த பந்து வீச்சாளர்களையும், இன்சமாம், யுகானா, யசீர் ஹமீட், அப்துல் ரசாக் போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட பாகிஸ்தான் அணி எந்த நேரத்தில் எப்படி ஆடமென்று எவராலும் கூறமுடியாது. எனவே, ஆசியக் கிண்ணச் சம்பியன் யார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

- லெஸ்லி

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற அணி எது?

02. இலங்கையில் நடைபெறவிருக்கும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளும் அணிகளின் எண்ணிக்கை யாது?

03. பிரெஞ் ஓபன் ரெனிஸ் ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தில் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?

**விளையாட்டுப் புதிர் - 15**

**விண்ணப்பப்படிவம்.**

முழுப்பெயர்:- ..........................................

முகவரி:- ..........................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 17.06.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 11,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## விளையாட்டுப் புதிர் இல. 14 இன் விடைகள்

1) அனஸ்டா ஷியா மிஸ்கினா
2) ரஷ்யா
3) பிரைன் லாரா

**பரிசு பெற்றவர்**
ச.அஸ்வத்தன்
மத்திய மகா வித்தியாலம்
கிளிநொச்சி.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

-வார நோக்கு... - யாழவன்



# கேள்விக்குள்ளான இலங்கை ஜனநாயகமும் தெருச் சண்டைக் களமான நாடாளுமன்றமும்

இலங்கையின் ஜனநாயகத்தின் தன்மை எங்கே போய்விட்டது. என்பதை எண்ணிப் பார்க்க வேண்டிய அளவுக்கு கடந்த சில வாரங்களாக அடுத்தடுத்து பல முக்கிய நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. ஊடகவியலாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்ட போது கேள்விக்குள்ளான இலங்கையின் ஜனநாயகம் கடந்த இரு தினங்களுக்கு முன்பு நாடாளு மன்றத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கு பின்னர் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டதென எண்ணத் தோன்றுகிறது.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் நடந்து கொண்ட அநாகரிகமான செயற்பாடானது சர்வதேசரீதியிலே இலங்கையின் தற்போதைய அரசுக்கு ஒருபெரும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளது. மதிப்பு வாய்ந்த பெறுமதியான பதவிகளை தக்க வைத்துள்ள அரசியல்வாதிகள் நாட்டின் சட்டதிட்டங்கள், ஜனநாயக மாண்மியம் என்பவற்றுக்கு விரோதமான முறையிலே நடந்து கொண்டமையானது வெட்கப்பட வேண்டியதோடு வேதனைப்பட வேண்டியதுமான விடயமாகும்.

தென்னிலங்கை சிங்கள அரசியலுக்கு வழிவழி வந்த சாபக் கேடாக அமைந்த "கட்சி நலன்" அரசியலானது இன்று நாடாளுமன்றில் கைகலப்பில் ஈடுபடுமளவுக்கு மாறியுள்ளது. முன்னைய அரசு பதவியிலிருந்த போது தமிழர்களுடைய இனப்பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாக தமக்குள்ளே கருத்துக்களாலும் காகிதக் கட்டுக்களாலும் மோதிக் கொண்ட சிங்கள அரசியற் கட்சிகள் இன்று தமது சுயலாப அரசியலுக்காகவும், தள்ளாடிக் கொண்டுள்ள தமது ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்காகவும் கட்சி பிரிந்து மோதிக் கொள்கின்றனர்.

நாட்டிலே போர் ஓய்ந்துள்ள இந்த நிலையில் அதி உயர் பீடமான நாடாளுமன்றிலே போர் தொடங்கி விட்டது. அந்தப் போரின் விளைவு சில சந்தர்ப்பங்களில் திடீர் பொதுத தேர்தல் ஒன்றிலே சென்று முடிவதற்கான புறச் சூழ்நிலைகளை உருவாக்க வழி சமைக்கலாம். மீண்டுமொரு தேர்தல் ஏற்படுமாகவிருந்தால் நாடு எவ்வாறு அதை எதிர்கொள்ளப் போகிறது என்பது இனங்காணப்பட வேணடிய விடயமாகும். மீண்டுமொரு தேர்தல் ஏற்படுவதற்கு சிங்கள அரசியல் தலைமைகள் அனுமதிக்குமாக இருந்தால் அது யானைதன் தலையில் தானே மண்ணை அள்ளிக்கொட்டிய கதையாக முடியும்.

மீண்டும் ஏற்படும் தேர்தல் நிச்சயமாக தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலே இன்னும் பல அரசி யல் வெற்றிகளை உள்நாட்டு தளத்திலும் சர்வதேச தளத்திலும் ஏற்படுத்தும். ஆனாலும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது தொடர்பாகவே பிணக்குகளை சந்திக்க வேண்டியேற்பட்டு அதன் மூலமாகவே ஆளும் கட்சிககும், எதிர்க் கட்சிக்கும் இடையே முறுகல் நிலை தோன்றி தற்போது ஆட்சியுள்ள சிறுபான்மை அரசு கலைக்கப்பட்டு மீண்டுமொரு தேர்தல் ஏற்படலாம் என எதிர் பார்க்கப்பட்டு அதற்கான அரசியல் ஆருடங்களும் அரசியல் ஆய்வாளர்களினால் வெளியிடப்பட்டு இருந்தன.

மிகவும் முக்கியமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலேயே முறுகல் நிலை தோன்றி சிறு கட்சிகளின் பலத்தை தன்பக்கம் திரட்டி ஆட்சியை கவிழ்க்கும் நடவடிக்கையிலே ரணில் தலைமையிலான கட்சிகள் ஈடுபடலாம் என பலர் கருத்து வெளியிட்டிருந்தனர். அவர்களது கருத்தை வலுப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பலரும் அவ்வப் போது சில கருத்துக்களை வெளியிட்டு வந்தனர்.

ஆனால், தற்போது ஹெல உறுமய கட்சியுடன் ஆளும் தரப்பு ஏற்படுத்திக் கொண்ட வீணான மோதல் ஆட்சிக் கலைப்புக்கோ அல்லது கவிழ்புக்கோ காரணமாக அமைந்துவிடக கூடிய சூழ்நிலையை தோற்றிவித்துள்ளது. ஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் தனது பதவியை ராஜினாமாச் செய்ததையடுதது அவரது இடத்திற்கு புதிதாக பௌத்த பிக்கு ஒருவரை நியமிப்பதற்காக

> சட்டப்பிரச்சினையை கிளப்பி அதன் காரணமாக வைத்து புதிய எம்.பி. பதவிப் பிரமாணம் செய்ய முடியாது எனப் பேசிய ஆளும் தரப்பு பின்னர் நாட்டின் சட்டங்களையே கேள்விக் குள்ளாக்கும் வகையில் நாடாளுமன்றத்தை தெருச் சண்டையின் களமாக மாற்றினார்கள்.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மையமாக வைத்தே தற்போதைய பிரச்சினை கிளப்பப்பட்டுள்ளது.

பதவியை இராஜினாமாச் செய்த பௌத்த பிக்கு தனது சுயவிருப்பின் பேரில பதவி துறப்பு முடிவை எடுக்கவில்லையெனவும் அவர் வற புறுத்தலின் பேரிலேயே தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளதுடன தனது இடத்திற்கு புதிதாக ஒருவரை நியமிக்க முடியாது நீதி மன்ற ஆணையை பெற்று இருப்பதாகவும் அரச தரப்பினர் சட்டப்பிரச்சினையொன்றை கிளப்பியிருந்தனர்.

இதற்கு சபாநாயகர் அவ்வாறானதொரு நீதிமன்ற ஆணை தனக்கு கிடைக்கப்பெறவில்லையெனவும், எனவே புதிய எம்.பி. சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளலாம் என அறிவித்தார். இதனையடுத்தே ஜே.வி.பி. உள்ளிட்ட ஆளும் தரப்பு சிங்கள அரசியல் அநாகரிக காடையர்கள் தமது காடைத் தனத்தை நாடாளுமன்றிலே அரங்கேற்றத் தொடங்கினர்.

சட்டப்பிரச்சினையை கிளப்பி அதன் காரணமாக வைத்து புதிய எம்.பி. பதவிப் பிரமாணம் செய்ய முடியாது எனப் பேசிய ஆளும் தரப்பு பின்னர் நாட்டின் சட்டங்களையே கேள்விக் குள்ளாக்கும் வகையில் நாடாளுமன்றத்தை தெருச் சண்டையின் களமாக மாற்றினார்கள்.

நாடாளுமன்றத்திற்கே உரிய விசேட சிறப்புரிமைச் சட்டங்கள் அனைத்தும் செல்லாததாகப் போயின.

நாட்டின் ஜனநாயகத் தன்மைக்கு அடையாளமாக கருதப்படும் செங்கோல் கூட களவாடப்பட்டு சிலமணி நேரம காணாமற்போனது அதனை பிரதி அமைச்சர் ஒருவரே தூக்கிச் சென்று ஒளித்து வைத்து நாடாளுமன்ற நகர்வு நடைபெறாத வண்ணம் இடையூறு ஏற்படுத்த முயன்றார்.

ஒரு விதத்திலே பார்த்தால் அந்தப் பிரதி அமைச்சருக்கு ஒரு பாராட்டு தெரிவிக்கலாம் போலுள்ளது. ஏனெனில் நடேசனின் படுகொலை, தமிழ் மக்களுடைய இயல்பு வாழ்வு, பாதிப்பு தமிழ் இளைஞர் யுவதிகள் விசாரணைகள் எதுவுமின்றி பல ஆண்டுகளாக சிறையில் வாடும் கொடுமை, கொலை, கொள்ளை மனித உரிமை மீறல்கள் என்பனவற்றையடுத்து இலங்கையின் ஜனநாயகம் மரணித்து விட்டதோ. என பலரும் எண்ணியதுண்டு இவர்களது எண்ணப்பாட்டுக்கு ஆதாரம் சேர்ப்பதற்காக செங்கோல் தூக்கிச் செல்லப்பட்ட சம்பவத்தை நோக்க வேண்டியுள்ளது.

இதனைவிட சிங்கள - பௌத்த மத மக்களினால் மிகவும் பெறுமதியான இடதிலே வைத்து பூசிக்கப்படும் பௌத்த பிக்கு ஒருவரின் காவியுடை நாட்டின் அதி உயர் பீடமான நாடாளுமன்றத்திலேயே வைத்து உரியப்படுவதற்கான நிலை தோன்றியமையும் வருந்தப்பட வேண்டிய விடயமாகும் அதுமட்டுமன்றி இந்த நடவடிக்கையில் ஈடுபட்டவர் அதாவது தற்போதைய அரசிலே பௌத்த சமய கலாசார அலுவலகங்கள் அமைச்சராக இருக்கும் ஜே.வி. பியைச் சேர்ந்த மகிந்த விஜய ஹேரத் என்பவரே பிக்குவின் காவியுடையை பிடித்து இழுத்துள்ளார்.

பௌத்த சமய காலாசாரங்களை பேசிப் பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட அமைச்சு ஒன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரே பிடித்து இழுத்து உரிய முயலகின்றார் என்றால் இலங்கையின் ஒவ்வொரு அமைசசும் தனது பெயருக்கு ஏற்றாற்போல கடமைகளை நிறைவேற்றுகிறதா என்பது தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

பதற்கடமைகளோடு தம்மை மட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டிய பௌத்த பிக்குகள் அநாவசியமாக இனவாத நோக்குடன் தாம் இராச்சியத்தை நிறுவப் போகின்றோம் என முழங்கிக் கொண்டு நாடாளுமன்ற அரசியலுக்குள் புகுந்து கொண்டு இப்போது வீணாக அவமானப்பட்டு நிற்கின்றனர். அவர்கள் கும்பிட வேண்டிய கைகளால் குட்டுப்பட்டும், குண்டுக் கட்டாக தூக்கி பந்தாடப்பட்டும் மோசமாக தாக்கப்படும் வைத்திய சாலையிலே தங்கி சிகிச்சை பெறவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுமுள்ளனர்.

இவ்வளவு சம்பவங்களையும் நேரில் பாடசாலை, மாணவர்கள், பொது மக்கள் பத்திரிகையாளர்கள் எனப் பலரும் கண்டும் தொலைக் காட்சிகள் மூலமாக பலர் பா[illegible]த்தும் நாட்டின் அரசியல் எதிர் காலத்தை எண்ணி வருத்தப்படுகின்றனர். இத்தனையும் நடந்த பிற்பாடும் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே, 'சில ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டுள்ளன. அவை தெரிவிப்பது போன்று எந்த விதமான சம்பவங்களும் இடம் பெறவில்லை வெறும் கருத்துப் பகிர்வுகளே நடைபெற்றன என முழுப் பூசணிக்காயை சோற்றிலே புதைத்து மீண்டுமொரு தேர்தலை சந்திக்க தாம் தயார் ஐக்கிய தேசியக் கட்சி தயாரா என்றவாறு சவாலும் விடுத்துள்ளர்.

நாட்டு மக்களின் முதுகிலே சவாரி விட நினைக்கும் அரசியற் காடைத்தனத்தின் வெளிப்பாடே இதுவாகும். நாட்டு மக்கள் அனைவரும் குருடர்ககளாகவும், செவிடர்களாகவும் இருப்பின் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே மாத்திரமன்றி வேறு எவரும் கூட கண்ணை மூடிக் கொண்டு அரசியற் சவாரி செய்யமுடியும். ஆனால் அத்தகையதொரு நிலை இன்று இலங்கையிலே இல்லை என்பதை இந்த பழம் பெரும் அரசியல் வாதிகள் என தமக்குப் பட்டம் சூட்டிக் கொண்டவர்கள் புரியாமலிருப்பது தான் சிந்தனைக்குரிய விடயமாகும்.

இவர்களது சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கைகள் காரணமாக மீண்டுமொரு பொதுத்தேர்தலை சந்திக்க வேண்டிய தலை விதி நாட்டுக்கு எழுதப்பட்டு இருந்தால் இதன் மூலமாக தமிழ் மக்களுடைய தலை விதி சரியான பாதையிலே எழுதப்படும். ஏனெனில் கட்சி நலன் சார்ந்த சுயலாப அரசியற் தேவைகள் காரணமாக ஆட்சிக் கலைப்பு இடம் பெறின் அது சந்திரிகா அரசுக்கு சர்வதேச அரங்கிலே விழும் கரும் புள்ளியாக அமையும் அத்துடன் தமிழ் மக்களுடைய பிரச்சினையை சமாதான வழியிலே தீர்ப்பதற்கு தென்னிலங்கை தயாராகவில்லையென்ற நிலைப்பாட்டையும் உலக அரங்கிலே தெளிவுபடுத்தும் எல்லாவற்றுக்கும் மேலாக மீண்டுமொரு தேர்தல் நடைபெறுமாக இருந்தால் தமிழ் மக்களுடைய நாடாளுமன்ற பிரதி நிதித்துவமானது தற்போதுள்ள எண்ணிக்கையிலும் ஒன்றிரண்டு மேலும் அதிகரிக்கும்.

தமிழ் இன விரோத சக்திகளின் செயற்பாடுகளுக்கு நிரந்தரமாக ஓய்வு வழங்கப்பட்டு விடும். இவ்வாறான நிலையை உருவாக்கித் தரவே தென்னிலங்கை தலை கீழாக புரண்டு படாதபாடுபடுகின்றது. கடமைகாக சமாதானத் தேரை இழுத்துச் செல்லும் சந்திரிகா அரசு தனது காய் நகர்த்தல்களை சரியான திசையிலே மேற்கொள்ளா விடின் அவர்களது அரசியல் வாழ்வு அஸ்தமனத்திற்கு உள்ளாகும்.

இதேவேளை, தமிழ் மக்களுடைய இயல்பு வாழ்க்கையை பெறறுக் கொடுக்க வேண்டும் என்பதை மைய தொனிப் பொருளாக வைத்து மாபெரும் கண்டனப் பேரணியொன்றை இயல்பு நிலை பாதிக்காத வண்ணம் நடாத்துவதற்கு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த கண்டனப் பேரணி நடவடிக்கைகளிலே பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்த வேண்டாமென பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகத்தினர் என அழைக்கப்படும் குடாநாட்டிலே நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் தலைமைப்பீடத்தினர் வானொலி மூலமாக அறிவித்தல் செய்து வருகின்றனர்.

இவர்கள் தமது அறிவிப்பிலே எதிர்காலத்தில் சிறந்த கல்வி மான்களாக உருவாக வேண்டிய மாணவர்களை குறிப்பிட்ட சிலரின் அரசியல் நலன்களுக்கு பயன்படுத்துவதை ஆசிரியர்கள் கைவிட வேண்டும். மாணவர்கள் சுதந்திரமாக, தமது கல்வியை கற்க அனுமதிக்க வேண்டும். அவர்களுக்கு எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படாத வண்ணம் ஆசிரியர்கள் கவனிக்க வேண்டும் என்ற கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். இது உண்மையிலேயே நகைப்புக்கிடமான விடயமாகும்.

இந்த விடயத்தை கதைக்கக் கூடிய தகுதி பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகத் தினருக்கு உண்டா? தமிழ் மாணவர்களுடைய சுதந்திரமான கற்றல் செயற்பாடுகளுக்கு பல்வேறு வழி முறைகளாலும் முட்டுக்கட்டையாக இருப்பவர்கள், முட்டுக் கட்டை போடுபவர்கள் யார்?

பெறுமதி வாய்ந்த பல பாடசாலைகளை உயர் பாதுகாப்பு வலயமெனும் போர்வைக்குள்ளே ஆக்கிரமித்து வைத்தும், போர்க் காலங்களிலே பாடசாலைகள் மீது குண்டு மழை பொழிந்தும் பல மாணவர்களை கொன்றும், பாடசாலைச் சீருடையிலேயே பாடசாலை மாணவி கிருசாந்தியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியும், மாணவன் சஞ்சீவனை பயங்கரவாதி என பட்டம் கட்டி சித்திரவதை செய்தும் சுட்டுக் கொன்றும் மாணவர்களின் சுதந்திரமான கற்றலுக்கு இடையூறு விளைவித்தவர்கள் யார்? இவற்றை இன்னும் தமிழ் மக்கள் மறந்து விடவில்லை. இனியும் மறக்கப் போவதுமில்லை.

இந்த லட்சணத்திலே தமது பாடசாலைகளை, வீடுகளை விட்டு வெளியேறும் படி எடுக்கப்படும் போராட்டத்திலே தமிழ் மாணவர்கள் கலந்து கொள்வது பாதகமான விடயமென பரப்புரை செய்கிறது. பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம். இவர்கள் திருந்துவதற்கான மார்க்கம் இந்த நூற்றாண்டிலும் இல்லை.

ஒட்டுமொத்தமாக எந்த வழியாகப் பார்த்தாலும் சிங்கள அரசும், அது சார்ந்த அமைப்புக்களும் தமிழ் மக்களை நசுக்கு வதற்கான நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றன. இது அவர்களுக்கு ஒரு போதும் வெற்றியை தேடித்தரப் போவதில்லை. அதற்கு மாறாக ஆயுத, அரசியல் பலம் என்ற ரீதியாக வென்று கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு வலுச்சேர்ப்பன வாகவே அமையப் போகின்றன. இதனை உணர்ந்து கொள்ளும் நிலை சிங்கள தலைமைகளுக்கு இன்னும் சிறிது காலத்தில் ஏற்படும். அதுவரை அவர்கள் போடும் கூத்துக்களும், ஆட்டங்களும் தொடரட்டும். நீடிக்காத நிலையற்ற அரசியலை நடாத்தும் சிங்கள கட்சிகளின் கூத்து முடிவுக்கு வரப்போகின்றது. தமிழ் மக்களுக்கான விடிவு காலம் அதிக தூரத்தில் இல்லை.

---

யாழ்.பாசையூர் புனித அந்தோனியார் பெரு விழாவை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரமாகிறது.



## குளிர் நிலவாய் வலம் வந்து...

இறையவனின் சுதன்தனையே கரந்தனிலே தாங்கி
இகமதிலே வாழ்வோர்க்கு களிப்புடனே வாரி
அருள் தனையே வழங்குகின்ற அற்புதன் அந்தோனி
அலங்கரித்த தேரேறி அழகு உலா வாராய்.
வேறுபாடு ஏதுமின்றி பக்தரெலாம் நாடி
வரம் கேட்டு உன்பாதம் வருகின்றார் தினமும்
அளவில்லா அற்புதங்கள் உன்வாழ்வில் புரிந்தாய்
அன்புடனே கேட்கின்றோம் அமைதி தனைத் தாராய்
சீரழியும் இளையோர்கள் மனமாற்றம் பெற்று
சீர்கேடு இல்லாத சமுதாயம் மலர
ஆன்மீகம் மேலோங்கி வானரசை நோக்க
ஆதவனாய் நீ எழுந்து ரதமேறி வாராய்
உழைப்பினிலே நாமுயர்ந்து நல் வாழ்வு வாழ
உலகினையே வெற்றி கொண்டு கல்வியிலே வளர
சாதிமத பேதமின்றி அன்புடன் உறவாட
குளிர்நிலவாய் வலம் வந்து குவலயத்தைக் காப்பாய்

இ.அ.அமலரட்ணம்.
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளம்குன்றா*
*நாடுஎன்ப நாட்டின் தலை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அச்சுறுத்தும் ஜே.வி.பியினர் நெருக்கடிக்குள் ஜனாதிபதி

இறுதியாக ஜே.வி.பியினர் தமது அடுத்தகட்ட அரசியல் நகர்வு குறித்த ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டார்கள் என்றே தோன்றுகின்றது.

புதிதாக - பொதுத்தேர்தல் நடைபெற்று வெறும் இரண்டு மாதங்கள் மட்டுமே முழுமையாக முடிந்துள்ள நிலையில், நான்கு நடாளுமன்ற அமர்வுகள் மட்டுமே - அதுவும் பெரும் குழப்பங்கள், கூச்சல்கள் மோதல்களுக்கு மத்தியில் நாடாளுமன்ற ஜனநாயகத்தையே அவமதிக்கும் வகையில் நடந்து முடிந்துள்ள சூழலில் மற்றொரு பொதுத்தேர்தல் பற்றிய கதை பகிரங்கமாகவே வெளிவரத்தொடங்கியுள்ளது.

இக்கதையானது ஒரு முன்னறிவிப்பாகவே வெளியிட்டுள்ளவர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பிரதான பங்காளியான ஜே.வி.பி யினரின் பிரசாரப்பீரங்கியும், முக்கியஸ்தருமான விமல் வீரவன்ச அவர்களேயாவார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் தீர்மானிப்பதை, தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. எனவே நாடாளுமன்ற பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும் பொருட்டு மீண்டும் ஒரு பொதுத்தேர்தலைச் சந்திக்க தாம் தயாராக இருப்பதாகவும், அந்த அறிவிப்பை வெளியிடுவது சரியானதாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளதை வைத்துப்பார்க்கும்போது இருவிடயங்கள் தெளிவாகின்றன.

ஒன்று அரசு தனது ஆட்சியை தொடர்ந்து நடத்தும் தகுதியை இழந்துவிட்டது என்பது.

இரண்டாவது எதிர்க்கட்சிகள் ஒன்று திரண்டு ஆட்சியைக் கலைக்கும் வலுவைப் பெற்றுவருகின்றது என்பது.

உண்மையில் அறுதிப்பெரும்பான்மைப் பலத்தைப் பெறாத அல்லது பெற்றுக்கொள்ளும் திராணியற்ற நிலையில் வெறுமனே ஆட்சியைக் கைப்பற்றும் அதிகார வெறியுடன், அரசமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையே சரியான வகையிலான கருத்தியல் ஒருமைப்பாடோ, புரிந்துணர்வு நிலைப்பாடோ தேர்தலுக்கு முன்பும் சரி, பின்பும் சரி முழுமையாக இருந்தது கிடையாது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஆட்சியிலிருந்து அகற்றுவதும், அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், ஜனாதிபதியினதும், ஜே.வி.பியினரதும் பிரதான இலட்சியமாக இருந்ததே அன்றி, ஸ்திரமான அரசொன்றை தேசிய நலன் குறித்த சிந்தனையுடன் அமைத்து, அதன் மூலம் சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமாக முன்னெடுக்கவும், நாட்டில் அமைதி நிலையை உறுதிப்படுத்தவும் அவர்கள் நினைத்தது கிடையாது என்பதையே நாடாளுமன்றத்தில் நடந்து முடிந்த நான்கு அமர்வுகளும் நிரூபித்துள்ளன.

ஒருமைப்பாடு என்பதன் அர்த்தம் புரியாத, அதிகார ஆளுமைப் பலத்தை மட்டுமே பிரயோகித்து, தம்மையும், தமது ஆட்சியையும் நிலைப்படுத்திவிடலாம் என்ற நினைப்புடன் ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரின் பலவீனம் சபாநாயகர் தேர்தலின்போதே வெட்டவெளிச்சமாகிவிட்டது.

உண்மையில் சரியான அரசியல் உணர்வுள்ள, ஜனநாயக தர்மங்களைக் கடைப் பிடிக்கின்ற, தார்மீக சிந்தனை ஐக்கிய மக்கள் சுகந்திர முன்னணிக்கோ அல்லது அதன் தலைவியான ஜனாதிபதி சந்திரிகாவுக்கோ இருந்திருக்குமாயின், அப்போதே அரசை பதவிவிலகச்செய்து பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த முனைந்திருக்கலாம், அல்லது மிகவும் கெளரவமாக ஆட்சியை எதிர்க்கட்சி பொறுப்பேற்கும் நிலையில் உள்ளதா என்பதை விசாரித்து அவர்களிடம் கையளித்திருக்கலாம்.

அறுதிப் பெரும்பான்மையை ஏதோவொரு உத்தியை கையாண்டு எப்படியாவது பெற்றுக்கொள்ளலாம், என்ற ஜனாதிபதியின் மூலோபாயத் திட்டங்களை ஜாதிக ஹெல உறுமயவின் பிக்குகளுடன் முரண்பட்டு மோதியதன் மூலம், ஜே.வி.பி யினர் நிர்மூலமாக்கியதையடுத்து, ஜனாதிபதியின் அந்தக்கனவும் நிர்மூலமாகியது.

ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவின்றி அறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலையில், ஜனாதிபதியின் கோபமும், ஆத்திரமும் ஜே.வி.பியினர் மேலேயே இலக்கு வைத்த போதிலும், அவர்களுடன் தான் பகைப்பது இப்போதைய அரசியல் யதார்த்த சூழலுக்கு பொருத்தமானதாக இருக்காது என உணர்ந்த அவர், ஜே.வி.பியின் அரசு மீதான ஆதிக்க வலுவையும் வெளிப்படுத்தவே செய்தது.

இப்போது நான்காவது நாடாளுமன்ற அமர்வும் - குழப்பத்தில் முடிந்த பின்னர் எதிர்க்கட்சியிலுள்ள ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுடன் அரசியல் பேரம்பேசும் முனைப்புடன் நகர்வுகளை மேற்கொண்ட போதிலும், அதிலும் தோல்வியுற்றுவரும் அவரால் நாடாளுமன்றத்தின் எதிர்காலம் குறித்து எந்தத் தீர்மானமும் எடுக்க முடியாதுள்ளதுடன், சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நடவடிக்கைக்கும், எந்தமுடிவுக்கும் அவர் வரமுடியாதவராகவும் உள்ளார்.

ஆட்சியை தொடரமுடியாது மறுதேர்தலுக்கு அறிவிப்பு விடுக்கும் நிலை தனக்கு ஏற்பட்டால், அது மிக மோசமான அரசியல் பின்னடைவாக தனக்கு அமைந்துவிடும் என்பதுடன், மீண்டும் ஜே.வி.பியுடன் கூட்டணியை அமைக்கும் தவிர்க்கவே முடியாத, *அரசியல் அபாயம் ஏற்படும் என்றும் ஜனாதிபதி அச்சமடையத்* தொடங்கியுள்ளார் என்பதை, அவரது அண்மைக்கால முன்னுக்குப்பின் முரணாண செயற்பாடுகள் உறுதிசெய்துள்ளன.

உதாரணம் தமிழ்க் கூட்டமைப்பினருடனான சந்திப்பும், அவர் அளித்துள்ள, அவரால் நிறைவேற்றவேமுடியாத வாக்குறுதியுமாகும்.

ஜனாதிபதியின் கூட்டமைப்பினருக்கான வாக்குறுதியை நிராகரிக்கும் ஜே.வி.பியினரும், ஏனைய பேரினவாத அமைப்புக்களும் ஓரணியில் திரள்வதும் அவருக்குப் பீதியை ஊட்டும் விடயமேயாகும்.

இந்த நிலையில் ஜே.வி.பியினர் அடுத்த தேர்தலுக்கு தயார். அதற்கான அறிவிப்பை செய்வதே சரியானதாகும் என்று தெரிவித்துள்ளமையானது ஜனாதிபதிக்கு விடுத்த பகிரங்க மிரட்டலாகவும் கருதவேண்டியுள்ளது.

ஜனாதிபதி என்ன செய்யப்போகிறார்?

அரசை வீழ்ச்சியினின்றும் மீட்பாரா? அடுத்த தேர்தல் பற்றி அவரும் யோசிப்பாரா?

அடுத்துவரும் ஓரிரு மாதங்கள் இலங்கை அரசியலில் மிகமுக்கியத்துவம் மிக்கவையாகவே இருக்கும்.

# நாடும் நடப்பும்




# சுகாதாரத்துறை ஊழியர்கள் மீண்டும் வேலைநிறுத்தம்

சுகாதாரத்துறை ஊழியர்கள் தமது சம்பளமுரண்பாட்டுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுததரக்கோரி எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் மீண்டும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாக சுகாதாரத் தொழிற்சங்கக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு உட்பட நாடளாவியரீதியில் மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் போராட்டத்தில் சுகாதாரத்துறையில் அங்கம் வகிக்கும் 54 தொழிற்சங்கங்கள் பங்கேற்கவுள்ளன.

சுகாதாரத்துறை ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை அரசாங்கம் வெளியிட்டுள்ளபோதும் மாகாணசபை நிர்வாகங்கள் இது தொடர்பில் தமது அலட்சியப்போக்கைத் தொடர்வதாக சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்புக் குற்றஞ்சாட்டுகிறது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் சுகாதார அமைச்சின் உயர்மட்டத்தோடு மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் பலனளிக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

## ஆங்கிலதினப் போட்டிகள் நடைபெறவுள்ள திகதிகள்

வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கிலதினப் போட்டிகள் நடைபெறும் தினங்கள் வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறைக்கோட்டப் பாடசாலைகளுக்கு இம்மாதம் 21 ஆம் திகதி வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும், கரவெட்டிக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு 22 ஆம் திகதி கரவெட்டி திருஇருதயக் கல்லூரியிலும், மருதங்கேணி கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு 23 ஆம் திகதி மருதங்கேணி இந்துத் தமிழ்க்கலவன் பாடசலையிலும் நடைபெறவுள்ளது. வலயமட்டப் போட்டிகள் யூலை மாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (122)

## அமைச்சரவை பேச்சாளராக மங்கள சமரவீர நியமனம்

விமானப் போக்குவரத்து மற்றும் கப்பல்துறைமுக அமைச்சர் மங்கள சமரவீரவை அமைச்சரவைப் பேச்சாளராக ஜனாதிபதி சந்திரிகா நியமித்துள்ளார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அமைச்சராகவும், அமைச்சரவைப் பேச்சாளராகவுமிருந்த றெஜினோல்ட் கூரே அந்தப் பதவியிலிருந்து விலகினார்.

இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே மங்கள சமரவீரவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

## சுற்றுச் சூழல் பாதுகாப்பு கூட்டம்

யாழ்மாவட்டச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் ஆரம்பக்கூட்டம் நாளை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தின் சூழல் பாதுகாப்புத் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

இதில் பிரதேசசெயலர் பிரிவுகளிலிருந்தும், பிரதேச சபைகள், உள்ளூராட்சி சபைகளிலிருந்தும் சூழல்ப் பாதுகாப்புக் குழுவுக்குத் தெரிவுசெய்யப்பட்ட அதிகாரிகள் கலந்து கொள்வர் எனத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சமுர்த்தி பயனாளிகளுக்கு கடன் வழங்கும் திட்டம்

நெடுந்தீவுப் பிரதேச சமுர்த்தி வங்கிச்சங்கமூடாக பயனாளிகளுக்கு கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுயதொழில் முயற்சிக்கடன், மீன்பிடிக்கடன், விவசாயக்கடன், என்ற அடிப்படையிலேயே கடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் தெரிவு செய்யப்பட்ட பத்துப் பயனாளிகளுக்கு சுயதொழில், மீன்பிடிக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

சமுர்த்திச் சிறுகுழுவில் அங்கம் வகிக்கும் ஒரு அங்கத்தவருக்கே முதலில் இக்கடன் வழங்கப்படுவதுடன், காலப்போக்கில் தவணை அடிப்படையில் பணத்தை மீளச்செலுத்தும் நடைமுறை சீராக இருப்பின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் கடன் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (113)

## நெடுந்தீவு உதவி அரசஅதிபர் பணிமனை தொலைபேசி இணைப்பு செயலிழந்தது

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் தொலைபேசி மீண்டும் செயலிழந்துள்ளதால், உடனடி அரச தேவைகளை நிறைவுசெய்வதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாக பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த காலங்களில் காலை 9 மணிதொடக்கம் பகல் 1 மணிவரைக்குமே செயற்பட்டு வந்த தொலைபேசி தற்போது முற்றாகச் செயலிழந்துள்ளது. இது தொடர்பாக இலங்கை ரெலிகொம் நிறுவனத்திற்கு அறிவித்தும், இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. (113)

# வெட்டுக் களிக்குளத்தின் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

நெடுந்தீவிலுள்ள வெட்டுக்களிக்குளம் நியாப் திட்டத்தின்கீழ் புனரமைக்கும் வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றது.

மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகளுக்கெல்லாம் அந்தப் பகுதி மக்கள் பூரண ஆதரவு வழங்கி, விரைவாக வேலைகளை முடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மண்அணைகள் அமைக்கும் வேலைகள் கடந்த சில நாட்களாக துரிதகதியில் நடைபெற்று வருகிறது. நியாப் நிறுவன அதிகாரிகள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் போன்றோரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் அடிக்கடி நெடுந்தீவுக்கு வருகை தந்து வேலைகளை மேற்பார்வை செய்து வருகின்றனர்.

இத்தகைய விரைவான நடவடிக்கைகளால் நெடுந்தீவு மக்களுக்கு நீண்டகாலம் நிலவிவந்த வெட்டுக்களிக்குளம் சம்பந்தமான அச்சம் நீங்கிவருவதாக தெரியவருகிறது. (113)

தெற்குத் திசையினிலே

# விஸ்தாரமாகிவரும் அரசியல் நெருக்கடியும் தாமதமாகிவரும் தீர்வுக்கான முயற்சிகளும்

இந்திரஜித்

இந்திய நாடாளுமன்றத்திலும். தமிழ் நாட்டின் சட்டசபையிலும் வன்முறைகள் தொடர்பாக கேள்விப்பட்ட எமக்கு தற்சமயம் அந்த காட்சிகளை இலங்கையின் நாடாளுமன்றத்திலும காணமுடிகிறது. அதுவும் அடுத் தடுத்து நாடாளுமன்ற அமர்வுகளில் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவது இலங்கை மக்கள் மத்தியில் நாடாளுமன்றத்தை ஒரு பொழுது போக்கு அம்சமாக பார்க்கும் நினைப்பை ஏற்படுத்தியுள்ளது. எவராலும், தமது விருப்பப்படி பயன்படுத்தக் கூடிய அரசியலமைப்பு இலங்கையில் மாத்திரமே நடைமுறையில் இருக்கிறது எனலாம்,இந்த அரசியல் அமைப்பை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கூட சில வேளைகளில் பயன்டுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த அரசியலமைப்பை பெரும்பான்மை வாக்குகளால் நடைமுறைப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த் தன, அதன் பாதிப்புக்கு உட்படாமலேயே தமது ஆட்சியை நடத்திச் சென்றமை விவேகமான செயல் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதாவது எதிர்க்கட்சியை பலமிழக்க செய்ததன் மூலம் தமது அரசியலமைப்பை நியாயப்படுத்தி முன்னெடுத்துச் செல்லக் கூடிய வாய்ப்பை ஜே.ஆர் ஜெயவர்தன ஏற்படுத்திக் கொண்டமையானது, அரசியல் விவேகம் என்பதைவிட வேறில்லை. இதற்கு பின்னர் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதிகளும், பிரதமர்களும், ஜே,ஆரின் அரசியமைப்பில் குறைகண்ட அதேநேரம் தமது ஆட்சிக்கும் அது பாதகமானதென்பதை வெளிப்படையாகவே ஏற்றுக் கொண்டனர்.



இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுக்காண வேண்டுமானால் தற்போதைய அரசியலமைப்பு திருத்தப்படவேண்டும் என்பதில் இலங்கையின் அனைத்துக் கட்சிகளும் இணக்கம் வெளியிட்டுள்ளன. ஆனால், அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும், நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை விட்டுக் கொடுக்க அதிகாரத்துக்கு தொடர்ந்தும் வந்துகொண்டிருக்கும் கட்சிகள் இரண்டும் விரும்பக்கொள்ள வில்லை.

தேர்தல் காலத்தில் அதனை நீக்குவதற்கு விருப்பத்தை வெளியிடுகின்றபோதும், பின்னர் பதவிக்கு வந்ததன் பின்னர் அதனைப்பற்றி பேசுவதில்லை. இன்றுள்ள நிலையும் அதுதான். நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றியமைக்கவேண்டும் என்ற நோக்குடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள்சென்ற ஜே.வி.பி. இன்று அதனை எவ்வாறு நிறைவேற்றுவது என தெரியாமல் இருக்கிறது. சிறுபான்மை அரசாங்கத்தின் மூலம் எதனையுமே சாதிக்க முடியாத நிலையில் இருக்கும் ஐக்கிய மக்கள் முன்னணி, தொடர்ந்தும் ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்கே இன்று தடுமாறும் நிலைக்கு ஆட்பட்டுள்ளது. இதன் பிரதிபலிப்புகளையே தொடர்ந்தும் இடம்பெற்று வரும் நாடாளுமன்ற வன்முறைகள் உணர்த்தி நிற்கின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தாம் பதவியேற்றது முதல் நான்காவது தடவையாக நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை நிரூபிப்பதில் தோல்வியையே கண்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் போர் நிறுத்த உடன்பாட்டை செய்து கொண்டபோதும், அதன் பின்னரும், அரசியலமைப்பில் ஜனாதிபதிக்குச் செல்வாக்கு இல்லாத நிலையை நாம் கண்டோம். அதேநேரம் அரசியலமைப்பில் பிரதமரைக் கலந்தாலோசித்த பின்னரே அவரின் அமைச்சரவையில் மாற்றங்களை ஜனாதிபதியினால் கொண்டு வரமுடியும் என்ற ஏற்பாடுக்கு, முற்றிலும் மாறான வகையில் ஜனாதிபதி ரணிலின் பெரும்பான்மை அரசாங்கத்தில் பயமின்றி மாற்றங்களைக் கொண்டு வந்தமை போன்ற நிகழ்வுகள் இலங்கையின் 1977 ஆம் அரசியலமைப்புக்கு கட்டியம் கூறும் முக்கிய உதாரணங்களாகும்.

இவ்வாறான அரசியலமைப்பை வைத்துக் கொண்டு நாளுக்கு நாள் நாடாளுமன்றத்தில், ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் தமது பலத்தை நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. அரசியலமைப்பை மாற்றியமைக்கவேண்டும் என சத்தமிடும் இந்த இரண்டு தரப்புக ளும் அதற்கு எதிரான கருத்தையும் கொண்டுள்ளன.

ஆனாலும் நாட்டில் இருக்கின்ற பிரதான எதிர்க்கட்சியின் பலம் சிறுபான்மை அரசாங்கத்தை வீழ்த்துகின்ற அளவுக்குகூட இல்லாமையால் இந்த நான்கு தடவைகளும் அரசாங்கம் தப்பிப்பிழைத்துக்கொண்டது. எனினும் இந்த நான்கு தடவைகளும் தம்மை பலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வந்த தன் பயனை தற்சமயம் அடைந்து விட்டதாகவே கருதலாம்,அரசாங்கம் கவிழ்க்கப்பட்டால் உடனடியாக மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பதில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு இன்னும் போதுமான வலுவில்லாத நிலையில், சந்தர்ப்பம் ஒன்றை அந்த முன்னணி எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

அந்த சந்தர்ப்பத்துக்கான ஆரம்ப அடிகள் தற்சமயம் அந்தக் கட்சிக்கு கிடைத்துள்ளன. அதற்காக அந்தக் கட்சி மிக முக்கிய அரசியல் நகர்வுகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதில் முக்கியமான ஒன்றுதான் .

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி அகியவற்றை தம்வசப்படுத்தி வைத்திருந்தமையாகும். ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் அந்தக் கட்சிக்கு வாக்காளர்களை திருப்திப்படுத்தி அரசாங்க கட்சியாகவர முடிந்தாலும், நாடாளுமன்றத்தில் தமது ஒழுக்கத்தைப் பேணுவதில் பாரிய பிரச்சினையை எதிர்நோக்குகிறது. ரட்ட பெரட்ட என்ற சிங்கள நாமத்துடன் நாட்டை எழுச்சிகொள்ளச்செய்வோம் என புறப்பட்ட ஜே.வி.பி சிறிய தோல்விகளைக் கூடத்தாங்கிக்கொள்ளமுடியாமல் இருக்கிறது. கடந்த நாடாளுமன்ற அமர்வில் அரசாங்கத்தின் பெரும்பான்மையை நிரூபிக்கும் வாக்கெடுப்பு குழம்பிப் போனமையை ஏற்றுக்கொள்ளமுடியாத ஜே.வி.பி, பிரதம மந்திரியை நாடாளுமன்றத்தில்வைத்தே தூசித்த சம்பவம் இதற்கு உதாரணமாகும். இதனையடுத்து அவருடன் இணக்கத்துக்குவரவேண்டிய கட்டாயமும் அதற்கு ஏற்பட்டது.

எழுச்சி என்ற நிலைக்குள் இருந்து விடுபட்டு, அரசியல் என்ற போர்வையை போர்த்திய பின்னர், சகல சவால்களையும் எதிர்கொண்டே ஆக வேண்டும் அதில் சோர்வடையமுடியாது, அதில் சோர்வடைந்தால் தமது எழுச்சிக்காக செய்த தியாகங்கள் எல்லாம் வீணாகிவிடும். இந்த உண்மை தற்சமயம் ஜே.வி.பி செல்கின்ற பாதையில் நிச்சயம் தென்படவேபோகிறது.

தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தியவர்கள் சிங்களவர்கள் என்ற கெட்டபெயர் ஏற்கனவே ஜே.வி.பிக்கு இருக்கிறது. தற்சமயம் ஜாதிக ஹெல உறுமய என்ற பெயருடன் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்துள்ள பௌத்த பிக்குகளும், ஜே.வி.பியையே குற்றம் கூறிவருகின்றனர். எனவே இது நீண்டகால அடிப்படையில் ஜே.வி.பி அரசியலில் சிங்கள மக்கள் மத்தியில் அதிருப்தியை கொண்டுவரக்கூடும். இவை யாவற்றையும்,விட ஜே.வி.பி தமிழ்மக்கள் மத்தியில் தீராத நம்பிக்கையீனத்தை தொடர்ந்தும் தக்கவைத்திருப்பதானது, அவர்களின் அரசியல்,எந்தளவான தூய்மையாக இருந்தாலும் அதனை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள போவதில்லை.

சர்வதேசமே ஏற்றுக் கொண்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி கோரிக்கையை தற்சமயம், ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என அந்தக் கட்சி கூறுவது தமிழர்கள் மத்தியில் அவர்களை அதிருப்தியுடன் நோக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஜே.வி.பி கூறுகின்ற நிர்வாக பகிர்வு விடயம் பல்லாண்டு காலத்துக்கு முந்திய கொள்கையாகும். அன்று தமிழர்களுக்கு சிங்கள அரசாங்கங்கள் அதனை செய்திருந்தால், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் அவசியம் ஏற்பட்டிருக்காது. ஜே.வி.பி இவற்றை யாவும் நன்கு உணர்ந்துள்ளபோதும், தற்சமயம் அதற்குத் தேவைப்படுவதெல்லாம் அதிகளவான சிங்களவர்களின் வாக்குகளாகும், எனவே அந்த குறிக்காக அந்தக் கட்சி, சிங்கள மக்கள் மத்தியில் தன்னாட்சிக்கு எதிரான கொள்கையை பரப்பி வருகிறது. ஜே.வி.பியின் சாதாரண உறுப்பினர் கூட இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளல்லர் என்ற வசனத்தைப் பேசும் அளவுக்கு தென்னிலங்கையின் சிங்களவர்கள் மத்தியில், ஜே.வி.பி ஊடுருவி வருகிறது. இது தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தின் புதிய அத்தியாயம் என்ற நிலைக்குச் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே அவ்வாறான நிலை ஒன்றைத் தவிர்ப்பதே அந்த கட்சிக்கு நீண்டகால பார்வையில் சிறப்பைத்தரும். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பொறுத்தவரையில் இந்த கொள்கைகளுக்கு எல்லாம் மாறுபட்ட கொள்கைகளை கொண்டுள்ளபோதும், அரசியல் இலாபத்துக்காக அவற்றை எல்லாம் கிடப்பில் போட்டுவைக்கும் நிலைப்பாட்டை அது கடைப்பிடித்துவருகிறது. இவ்வாறான குறுகிய நோக்க அரசியல் இலங்கையில் நின்று பிடிக்கும் வரை இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கப்போவதில்லை.

இந்திய அரசாங்கம் கூட இலங்கையில் சிறுபான்மையினரின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையிலான தீர்வுகளுக்கு ஆதரவு தரப்போவதாக அறிவித்துள்ளது. இது ஜே.வி.பி, இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய கொள்கைகள் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு சென்றுள்ள பிரசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. எனினும் சிங்கள ஊடகங்கள் இந்திய கொள்கைகள் சம்பந்தமாக உரிய இடத்தைக் கொடுக்கவில்லை என்பதால் ஜே.வி.பி சற்று தப்பி பிழைத்துள்ளது எனக் கூறலாம்.

ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்தவரையில், அது தற்சமயம் இனப் பிரச்சினை தீர்வு சம்பந்தமாக பாரிய பொறுப்புகளில் இருந்து விலகியிருப்பதால், தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியிலான இனப்பிரச்சினை தொடர்பான விமர்சனங்களில் இருந்து தப்பியுள்ளது. இதற்கு மத்தியில் தற்சமயம் இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி நிலைமை, ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சிறுபான்மை ஆட்சி நிலைக்குமா? ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான எதிர் கட்சிகள் தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் நடைமுறை அரசியல் நெருக்கடிக்கு தீர்வை எட்டுமா? இவை இரண்டும் இல்லாமல் தேசிய அரசாங்கம் ஒன்று நாட்டின் நலன் கருதி உருவாகுமா? அல்லது மீண்டும் பொதுத் தேர்தலா? நாளுக்கு நாள் பெரிதாகி வரும் இலங்கையின் அரசியல் நெருக்கடி, இனப் பிரச்சினை தீர்வைப்பொறுத்தமட்டில் கால தாமத்துக்கு நிச்சயம் வழியேற்படுத்தும். ஆனால், இந்த காலதாமதமானது தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கைளை,அது தொடர்பான போராட்ட முனைப்புகளை சர்வதேசத்தின் முன்னால் பலஸ்தீன போராட்டத்தை காட்டிலும் நியாயமான போராட்டமாக அங்கீகரிக்கும் வாய்ப்பைபெற்றுக் கொடுக்கப் போவது உண்மை.

---

# கரை மோதும் அலையும் அலைமோதும் மனமும்

என்.சண்முகலிங்கன்

உலக முதல் உயிரினத்தின் தாய்மடி கடலம்மா. அவள் காலடியில் என் உயிர் அன்னையின் அஸ்தியை சங்கமமாக்கும் சடங்கினை ஆர்ப்பரிக்கும் என் நெஞ்சின லைகள்

எத்தனை வருடங்களுக்குப் பிறகு கீரிமலை கடல் மடியில். எத்தனை தடைகள், தடவுதல்களைத்தாண்டி எங்கள் கடலன்னையிடம். வரையறுக்கப்பட்ட கால, இட நிர்ணயத்துள் எல்லாம் முடித்து திரும்பிவிடும் நிர்ப்பந்தங்கள். எங்கள் கடலை, எங்கள் கேணியை, எங்கள் சாமியின் தீர்த்தவாரியை நாங்கள் காண இத்தனை இத்தனை இடைஞ்சல்களா...

போர் நிகழ்ந்தவேளை, அம்மம்மாவுக்கும், அப்பாவுக்கும் இடருடன்கூட இந்த கீரிமலை சங்கமபாக்கியமில்லை. இப்பொழுது சமாதானத்துக்கான பொழுதிலும் இயல்பு வாழ்க்கை திரும்பியதாயில்லை.

'செத்த கடலா? உயிர்க்கடலா?'

உலக சுற்றுச் சூழல் நாள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் இந்த ஆண்டுக்கான குவிமையம் ஒரு கணம் எனக்குள் விஸ்வரூபதரிசனமாகும். கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக, சூழல் மாசுபடுதலின் விளைவாக கடலும் சமுத்திரங்களும் பெருமளவு பாதிப்பினை எதிர்கொண்டுள்ளன.

இறந்த வலயங்களின் பரப்பளவு அதிகரித்து வருகின்றது. இந்நிலையில்தான் 'தேவை! கடல்களும் சமுத்திரங்களும்: பிணமாகவா? உயிருடனா?' - Wanted ! Seas and Oceans: Dead or Alive இவ்வாண்டின் கருப்பொருளானது.

'செத்த கடலா? உயிர்க்கடலா?' என்ற இந்தக் கருப்பொருள், எனக்குள் 'செத்த இருப்பா? உயிர் வாழ்வா?' என எதிரொலிக்கும். கடலோடுகலந்த எங்கள் பண்பாட்டு வாழ்வுக்கு, கடலால் வளமான எங்கள் பொருளாதார வாழ்வுக்கு நேர்ந்த பேரிடியில் செத்த இருப்பில் எத்தனை பேர் இன்று எம்மிடம்

மாவிட்டபுர முருகன் கோயில் தீர்த்த வேளை - என்கையைப் பிடித்தபடி கீரிமலை கடலில் தீர்த்தமாட வைத்து எங்கள் கடலன்னையை எனக்கு அறிமுகம் செய்து வைத்த என் அப்பா, 'இனி அந்தப் பாக்கியம் இல்லையா' என ஊரைப்பிரிந்த சில நாட்களுக்குள்ளாகவே உயிர்பிரிந்துபோனார். எத்தனை உறவுகளின் 31 ம் நாள் ஆத்ம சாந்தி சடங்குகளை கீரிமலையில் நின்று நடத்திய அப்பாவுக்கு அந்தக் கடனை எங்களால் செய்யமுடியாதபடி எண்பதுகளிலேயே தடைமுள்வேலிகள் போடப்பட்டுவிட்டன. இன்னமும் இயல்பு நிலை மீண்டதாயில்லை.

'எங்கட சுடலை - குடிமனையை சாக முந்தி ஒருக்கா பாக்கவழி கிடைக்குமா' கெஞ்சும் அந்த சபாபதிப்பிள்ளை முகாம் முதியவர் ஒருவகை மாதிரிதான். பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மட்டும் 2574 மீனவக் குடும்பங்களின் ஏக்கப் பெருமூச்சுக்களை புள்ளி விபரங்கள் பதிவு செய்யும். நீலங்காடு, ஊருண்டி மண்டைதீவு, கிழக்கரியாலை, தனங்களப்பு, எழுதுமட்டுவாள், அம்பனை, பருத்தித்துறை வல்வெட்டித்துறை என நீளும் எம் கடலை, கரையை விழுங்கிய உயர்பாதுகாப்பு வலய பரப்புகளையும் சேர்த்தால் 4590 க்கு அதிகமான குடும்பங்களது மூச்சாக அது மூழும்.

இடம்பெயர்ந்த கடலோர கிராமங்கள் மீளவும் குடியமர அனுமதியில்லை. உயர் பாதுகாப்பு வலயம் விழுங்கிய 435 வடபகுதி கிராமங்களில் கணிசமானளவு மீனவக் கிராமங்கள். இக்கிராமங்களின் மீள் குடியேற்ற வாழ்வில் தானே இந்தக் கடற்பரப்பின் உயிர்ப்பும் உறவாடலும்

மீண்டும் மீண்டும் ,வந்த சபாபதிப்பிள்ளை முகாம் முதியவரின் முகம் மன்றாடிய தன் கடலைக் காணத் தவிக்கும் அந்த முதியவர் இல்லாமல் அவர் கடலின் சூழல்காப்பு பற்றி கருத்துரைகளுக்கு என்ன பொருள்? 14 ஆண்டு கால அகதி முகாம் வாழ்வில் செத்ததொரு இருப்பிலான இந்த மக்களின் மீளுதல் இல்லாமல், கடலை காக்கும் சூழலியல் பிரகடனங்கள் அர்த்தம் பெறத்தான் முடியுமா?

> இந்தக் கட்டுரை சூழல் பாதுகாப்புப் பகுதி ஏற்பாடுசெய்துள்ள சூழல் விழிப்புணர்வு மாதத்தையொட்டிப் பிரசுரமாகின்றது.

நிலைத்து நீடிக்கும் மேம்பாட்டுக்கான உலக உச்சி மாநாட்டில் (World summit on sustainable development) முன்மொழியப்பட்ட அமுலாக்கல் திட்டம் 2004 ம் ஆண்டளவில் கடல்சார்ந்த அனைத்து மதிப்பீடுகளையும் 2012 ல் பாதுகாக்கப்பட்ட கடற்பரப்புகளில் வளர்ச்சியையும் வேண்டி நிற்கின்றது. அத்திட்டப்படி அழிவு தரக்கூடிய மீன்பிடி முறைகள் மற்றும் சட்டபூர்வமற்ற ஒழுங்கமைக்கப்படாத வளபாவனை முற்றாக நீங்கப்படவேண்டும்.

எங்கள் நிலை...............!

எங்கள் கடலில் யார்யாரோ சட்டபூர்வ மற்று ஆதிக்கம் செலுத்த, கடலின் மடியில் பிறந்தவனுக்கு கடலைக் காணும் அனுமதி மறுக்கும் கடல்வலய தடைச்சட்டங்கள். காண விடுகின்ற வேளையிலும் கூட கடுமையான, வேண்டியபொழுது கரைதிரும்பமுடியாத உடல் விறைக்கும்படியான நிபந்தனைகள்

கடலிலிருந்து பெருமளவுக்கு மக்கள் அந்நியமயப்படுத்தப்பட்ட இந்நிலையில் உலக உச்சி மாநாடுகள் வேண்டிநிற்கும் மதிப்பீடுகள எப்படி சாத்தியமாகும்.

ஐ.நா சபையிலிருந்து இன்று எங்கள் சமாதானத்திற்கென உண்மையான விசுவாசத்துடனும், உள்நோக்கங்களுடனும் உழைக்கும் அனைவரும் கவனத்திற்கொள்ள வேண்டிய இந்த ஆண்டுக்கான இலங்கை தொடர்பான - சூழலியல் குவிமையமாக இந்த வினாக்கள் அமைய வேண்டும்

எங்கள் கடலுடனனான எங்கள் உறவுக்கு முள்வேலியிட்டபடி, எங்கள் வாழ்வின் சுற்றுப்புற சூழலையே ஆக்கிரமிப்பாய் விழுங்கியபடி சடங்காசாரமாய், உலக ஒப்பாசாரமாய் இன்னுமெத்தனை நாட்களுக்குத்தான் இந்த செத்த இருப்பு.....

என் நெஞ்சின் அலைகளை - தவிப்பினைத் தணிக்க முடியவில்லை.

ஒரு மைல் வலப்பக்கமாகப் போனால் எந்தையும் தாயும் நாங்களும் குலாவிய எங்கள் பரம்பரை வீடு இடப்பக்கமாக ஒரு மைல்கூட போகத்தேவையில்லை எங்களை உருவாக்கிய கல்லூரி என கீரிமலையிலிருந்து மீளும் வழியெல்லாம் மோதும் அலைகளால் நெஞ்சு வலிக்கும் நீலக்கடலலையே எனது நெஞ்சினலைகளடி.....

# ஈராக்கின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆயுத தாரிகளால் நேற்று சுட்டுக் கொலை!

## தலைநகர் பாக்தாத்தில் சம்பவம்

(பாக்தாத்)

ஈராக் இடைக்கால அரசாங்கத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் பஸ்ஸாம் கூபா தலைநகர் பாக்தாத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை அல்-அசீமியா மாவட்டத்தினூடாக தனது அலுவலகத்திற்கு காரில் சென்றுகொண்டிருந்த வேளையிலேயே - இவர் மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் தாக்குதல் மேற்கொண்டதாக ஈராக்கின் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

வயிற்றில் படுகாயமடைந்த அமைச்சர், உடனடியாகவே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் சிறிது நேரத்திலேயே உயிரிழந்ததாக அவர் மேலும் தெரிவித்தார். இந்தத் தாக்குதலில் அமைச்சரின் கார்ச் சாரதியும் படுகாயமடைந்தார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக தான் அதிர்ச்சியடைந்த அதேவேளை ஆச்சரியமடையவில்லையெனவும், ஜூன் 30 ஆம் திகதி, இடைக்கால அரசு தொடர்பான அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் இவ்வாறான தாக்குதல்கள் நடக்கலாமென எதிர்பார்த்ததாகவும் வெளியுறவு அமைச்சின் அதிகாரி குறிப்பிட்டார்.

பிரதி வெளிவிவகார அமைச்சர் பஸ்ஸாம் கூபா - ஈராக்கின் பிரதி வெளிநாட்டு அமைச்சர்கள் பலரில் ஒருவராக இருந்தவர். அத்துடன் ஐ.நாவிலுள்ள ஈராக்கிற்கான குழுவின் பதில் தலைவராகவும் இருந்ததுடன் சீனாவுக்கான ஈராக்கின் தூதுவராகவும் முன்னர் பணிபுரிந்தவராவார்.

# கொங்கோவில் இராணுவப் புரட்சி அரச படைகளினால் முறியடிப்பு!

ஜனநாயக மக்கள் குடியரசான கொங்கோவில் இராணுவப் புரட்சி மூலம் ஜனாதிபதி கபிலா தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்க்கும் முயற்சியாக தலைநகர் இன்ஸாஸாவில் கடுமையான துப்பாக்கிவேட்டுச் சத்தங்கள் கடந்த வியாழனிலிருந்து கேட்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆட்லறி மற்றும் கனரக ஆயுதங்களின் வேட்டுச் சத்தங்கள் தலைநகரிலுள்ள அரச தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்திற்கு அருகிலும் மற்றும் பல மாவட்டங்களிலும் கேட்டவண்ணமிருந்தன.

இராணுவப்புரட்சி முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கபிலாவின் கட்டுப்பாட்டிற்குள் நாடு இருப்பதாகவும் அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்ஸாஸாவிலுள்ள மிகப்பெரிய இராணுவத் தளமான சட்சியிலிருந்து கொஙகோ தலைநகரத்திற்கு வெளியேயுள்ள ஆற்றுக்கப்பால் ஆட்லறி எறிகணைகள் ஏவப்படுவதனை தான் கேட்டதாக பிரிட்டன் தூதுவர் ஜிம் அற்கின்சன் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

இராணுவ ட்ரக்குகள் பலவற்றில் ஜனாதிபதி கபிலாவிற்கு ஆதரவான பெருமளவு படைகள் தலைநகர் நோக்கிச் சென்றதாக பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

அரச தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக இராணுவத்திலிருந்து பிரிந்துசென்ற குழு அறிவித்த சிறிது நேரத்தில் அரசாங்கப் படைகள் அதனை மீளவும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன.

கிளர்ச்சியாளர்கள் - தலைநகர் இன்ஸாஸாவிற்கான மின்விநியோகத்தை மூன்று மணித்தியாலங்களாகத் துண்டித்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# உலகத் தலைவர்களின் அஞ்சலியுடன் டொனால்ட் ரீகனின் உடல் அடக்கம்!



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி மறைந்த டொனால்ட் ரீகனின் இறுதிச் சடங்குகள் நேற்றுமுன்தினம் கலிபோர்னியாவிலுள்ள சிமிவலி பகுதியிலுள்ள அவரது நூலகம் அமைந்துள்ள பகுதியில், அவரது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் முன்னாள், இன்நாள் உலகத் தலைவர்களின் இறுதி அஞ்சலியுடன் அடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக ரீகனின் புகழுடல் வொஷிங்ரனிலுள்ள பிரதான தேவாலயத்தில் வைக்கப்பட்டு தேசிய ரீதியிலான இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன் பின்னர் புகழுடல் கலிபோர்னியாவிலுள்ள அவரது நூல் நிலையவளாகத்திற்கு அமெரிக்க தேசியக் கொடி போர்த்தப்பட்ட நிலையில் விமானம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட புகழுடல் விமானத்திலிருந்து இறககி அமரர் ஊர்தியில் ஏற்றப்பட்டபோது, அமெரிக்க கடற் படையினர் 21 பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்து தமது மரியாதையை செலுத்தினர்.

கலிபோர்னியாவிலுள்ள ரீகனின் நூல் நிலையத்திற்கு செல்வதற்கு நாற்பது கிலோ மீற்றர் தூரம் வரை மக்கள் வீதியின் இரு மருங்கிலும் தமது அஞ்சலியைச் செலுத்த ஊர்வலம் சென்றடைந்தது.

இதன் பின்னர் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்ட தலைவர்கள் தமது அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர். இதில் பிரிட்டனின் முன்னாள் பிரதமர் மார்கிரட் தட்சர், கனடாவின் முன்னாள் பிரதமர் பிறெய்ன் மல்றோனி, அமெரிக்காவின் முன்னாள் அதிபர் சீனியர் ஜோர்ஜ் புஷ், ஆகியோரும் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் அடங்குவர்.

இதன் பின் ரீகனின் புகழுடல் அவரது நூலக வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இங்கு தனது உடலை அடக்கம் செய்வதையே ரீகன் விரும்பியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ரீகனின் இறுதி நிகழ்வில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான சீனியர் ஜோர்ஜ் புஷ், பில் கிளின்ரன், ஜிம்மி காட்டர் மற்றும் ஜெரால்ட் போட் ஆகியோரும், ரஷய சார்பில் முன்னாள் சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர், ஜேர்மன் சான்சிலர் ஜெராட் ஸ்றூடர், தென்னாபிரிக்க ஜனாதிபதி தபோமெபிகி மற்றும் ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் ஆகிய இந்நாள் உலகத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

## சேர்பிய முஸ்லிம்கள் படுகொலை:

# முதன்முறையாக தமது குற்றத்தை சேர்பியர்கள் ஒப்புக்கொண்டனர்!

பொஸ்னியாவில் 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பொஸ்னிய சேர்பியர்களால் பொஸ்னிய முஸ்லிம்கள் சேபனிகா மாநிலத்தில் பெருமளவில் கொல்லப்பட்டதனை தற்போது விசாரணை மேற்கொண்டு வரும் குழுவின் முன் சேர்பியர்கள் முதன்முறையாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்த சேபனிகா மாநிலத்தில் பெருமளவில் சேர்பிய முஸ்லிம்கள் கொல்லப்பட்டமையானது மிகப்பெரிய இன அழிப்பு எனத் தெரிவிக்கப்படுகிறது.

சேர்பியர்களால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட 32 புதைகுழிகளும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.




இதேவேளை - சேர்பிய முஸ்லிம்களை படுகொலைசெய்த பொஸ்னிய சேர்பிய சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்தால் இது தொடர்பான முழு உண்மையும் தெரியவருமென விமர்சகர்கள் தெரிவித்திருப்பதாக பி.பி.சி. செய்தியாளர் தெரிவித்தார்.

பொஸ்னிய உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 8 வருடங்கள் கடந்த பின்னரேயே இந்த புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் சேர்பியர்களும் முதன்முறையாக தமது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர்.

பொஸ்னிய சேர்பியர்கள் தமது படுகொலைகளை பின்வரும் ஒழுங்கு முறையில் நடத்தியுள்ளனர்.

முதலாவதாக நகரம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அங்குள்ள பெண்களைத் தனிமைப்படுத்துவது. பின்னர், சிறுவர்களையும், வயோதிபர்களையும் கொல்வது.

இந்தப் படுகொலைகளுக்கு சேர்பிய இராணுவம், பொலிஸ் மற்றும் உள்துறை அமைச்சின் விசேட பிரிவென்பவற்றை ஈடுபடுத்தியமை.

கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சேர்பிய முஸ்லிம்களின் 28 உடல்களை மீள எடுத்து வேறொரு இடத்தில் புதைத்தமை.



சேபனிகா மாநிலத்தில் மட்டும் 7 ஆயிரத்து 779 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஆயிரத்து 332 பேரின் உடல்கள அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தப் படுகொலைகளை விசாரிப்பதற்கு சர்வதேச அமைப்புடன் முஸ்லிம் ஒருவரும் இணைக்கப்பட்டுள்ளார்.இந்தக் கொலைகள் தொடர்பாக 14 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போதிலும் நான்கு பேர் மட்டுமே இதுவரை தண்டனைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மத்திய கிழக்குத் தொடர்பான

# அமெரிக்காவின் சீர்திருத்தத் திட்டத்திற்கு அல்-கொய்டா பிரதித் தலைவர் கண்டனம்!



மத்திய கிழக்கில் ஜனநாயகச் சீர்திருத்தம் என்ற வகையில் அமெரிக்கா நடைமுறைப்படுத்தவுள்ள திட்டத்தினை அல்கொய்டா அமைப்பின் பிரதித் தலைவர் அல்.சவாரி கடுமையாகக் கண்டித்துள்ளார்.

அல்.அராபிய தொலைக்காட்சிக்கு இவரால் அனுப்பப்பட்ட ஒளிநாடாவிலேயே இவர் மேற்கண்ட கண்டனத்தை தெரிவித்துள்ளார். அந்த ஒளிநாடாவில் இவர் மேலும் தெரிவித்ததாவது -

அராபிய நாடுகளை அமெரிக்கா மாற்ற முயற்சி செய்வதையும் இவர் குற்றம் சாட்டியுள்ளார். அராபிய நாடுகளில் சீர்திருத்தத்தை மேற்கொள்ள அமெரிக்காவிற்கு எந்தவொரு உரிமையும் இல்லை.

அத்துடன், சர்வதேச மனிதவுரிமை அமைப்பு என்ற வகையில் செயற்படும் அமைப்பு முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு குற்றவாளி அமைப்பாகும்.

அராபியர்களின் சுதந்திரத்தையோ அல்லது அவர்களின் பெருமைகளையோ சீர்திருத்தம் செய்வதற்கு அமெரிக்காவிற்கு எவ்வித உரிமையும் இல்லை.

அராபியர்களின் சீர்திருத்தமென்பது அவர்களிடமிருந்துதான் வரவேண்டும். குறிப்பாக தற்போதுள்ளவர்கள், எதிர்கால சந்ததிகள் மற்றும் எமது சிறுவர்களென அனைத்து அராபியர்களும்தான் இந்தச் சீர்திருத்தத்தை கொண்டுவரவேண்டுமே தவிர வேற்று நாட்டவர் இதனைச் செய்யமுடியாது எனத் தெரிவித்தார்.

இதேவேளை - இந்தக் குரல் அல் சவாரினுடையதாகத்தான் இருக்கவேண்டுமென சி.ஐ.ஏ. தெரிவித்தது.

## தீவிரவாதம் குறித்து

# அமெரிக்கா தவறான தகவலை வெளியிட்டதாக புச்சர் தெரிவிப்பு!



உலக அளவில் தீவிரவாதம் குறைந்துவிட்டதாக தவறான தகவல் கொடுத்துவிட்டதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் ஒப்புக் கொண்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி ரிச்சர்ட் புச்சர் குறிப்பிடுகையில் 'கடந்த 34 ஆண்டுகளில் எப்போதும் இல்லாத அளவுக்கு தீவிரவாதம் குறைந்து விட்டதாக வெளியுறவுத்துறை அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இந்த தவறை வாக்ஸ்மேன் என்ற எம்.பி சுட்டிக் காட்டியுள்ளார்.

அமெரிக்கா எடுத்துவரும் கடும் நடவடிக்கையின் அடிப்படையில் அதிகாரிகள் இந்த தகவலை கொடுத்து விட்டனர். தற்போது இந்த தவறு திருத்தப்பட்டுவிட்டது. விரைவில் சரியான எண்ணிக்கையுடன் கூடிய அறிக்கை வெளியிடப்படும்' என்றார்.


உலகச் சூழல் தினம் - யூன் 05



எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

World Environment Day - June 05

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

முருகைக் கற் பாறைகள் 93 நாடுகளில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு தரம் இளந்துள்ளன. உலகில் மீந்திருக்கும் பளவப் பாறைகளில் 60 வீதமானவை வரும் ஒவ்வொரு ஆண்டுகளுக்குள் பாரிய அளிவைச் சந்திக்கும் அபாயத்தில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



குக்குலே கங்கவில் இடம்பெற்ற பன்னாட்டு ஒத்திகை நிகழ்வில், திடீர் சுகவீனமுற்ற அமெரிக்கச் சிப்பாய் ஒருவரை மருத்துவப் படைப்பிரிவினர் அழைத்துச் செல்கின்றனர்.

# அஸ்கிரிய பீடாதிபதியின் இறுதிச்சடங்கு இன்று!

## தேசிய துக்கதினமாக பிரகடனம்

(கொழும்பு)

அஸ்கிரிய பீடாதிபதி ரம்புக் வெல சிறி விபஸி தேரரின் இறுதிச் சடங்கு பூரண அரச மரியாதையுடன் இன்று மாலை 4 மணிக்கு கண்டி போலிஸ் மைதானத்தில் நடைபெற வுள்ளது.

அஸ்கிரிய மகாநாயக்கரின் இறு திச் சடங்கை முன்னிட்டு, இன்று தேசிய துக்கதினமாக அரசாங்கத்தி னால் பிரகடனம் செய்யப்பட்டிருக் கிறது.

அஸ்கிரிய பீடாதிபதிக்கு பெரும் எண்ணிக்கையிலானோர் தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித் துள்ளனர். இவர்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் அடங்குவர்.

இறுதிச் சடங்கில் பங்குபற்று பவர்களின் நலன் கருதி கண்டி நகரில் இலவசப் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன் முக்கிய வீதிகள் சிலவும் மூடப் பட்டுள்ளன.

## சுதந்திர முன்னணி...

தொரு முடிவாகும். சமாதான செயற் பாடுகளுக்கும், நாட்டின் அபிவிருத் திக்கும் நல்ல தொடர்புள்ளது.

கடந்த ஐக்கிய தேசிய முன் னணி தலைமையிலான அரசாங் கத்தின் ஆட்சிக்காலத்தில் அபிவி ருத்திப் பணிகளுக்கு 45 ஆயிரம் கோடி ரூபாய்களை வழங்க உலக நாடுகள் முன்வந்தன. சமாதான செயற்பாடுகளோடு அந்தத் தொகை யினை வழங்குவதாக அவர்கள் தெரிவித்தனர். அந்த உதவியினை நாம் எப்படியாவது பெற்றுக்கொள்ள வேண்டும்.

இடைக்காலத் தன்னாட்சி அதி கார ஆலோசனை புதியதொன்றல்ல. இந்த ஆலோசனையை முதலில் சமர்ப்பித்தவர் எனது பாட்டனாரான சௌமியமூர்த்தி தொண்டமானா வார். ஜனாதிபதியும் இடைக்கால வரைபினை வடக்கு கிழக்கில் நிறுவுவதற்கு 2000 ஆம் ஆண்டில் ஒப்புக்கொண்டார்.

எனவே, இடைக்கால வரை பினை விடுதலைப் புலிகளுக்கு வழங்க வேண்டுமென தொண்டமான் அந்தப் பேட்டியில் மேலும் தெரி வித்தார்.

## உள்நாட்டுப் பிரச்சினை...

உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - உலக சமாதான முயற்சிக ளுக்கு ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் கடந்த 50 ஆண்டு களாக பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் பங்களித்து வருகிறது. எனவே, அந்த அமைப்பின் அனு சரணையில் இலங்கையில் சமாதான இராணுவப் பயிற்சி மேற்கொள்ளப் படுவது சிறந்த முன்னெடுப்பாகும்.

இலங்கை 1962 ஆம் ஆண்டில் இருந்து ஐக்கிய நாடுகள் அமைப் பின் இராணுவப் பங்களிப்பில் பங் கேற்கவில்லை. எனினும் கொங்கோ, புருண்டி ஆகிய நாடுகளில் இலங்கை இராணுவம் சிறிய தொகையில் நிலை கொண்டுள்ளது.

எதிர்காலத்தில் இதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள் ளன. உலகில் சமாதானத்துக்கு எதிராக இருக்கும் சவால்களை எதிர்கொள்ள இராணுவம் புதிய உத்வேகங்களை மேற்கொள்ள வேண்டும்.

இராணுவம் ஒருநாட்டின் சமாதா னத்தில் பங்கேற்கச் செல்லும் அதேநேரம் அந்த நாட்டில் இருந்து மீண்டும் தமது நாட்டுக்கு திரும்பு வது தொடர்பான தெளிவான கொள் கையைக் கொண்டிருக்க வேண்டி யது அவசியமாகும்.

ஏனெனில், ஒரு நாட்டின் பிரச்சி னைத் தீவுகளை இராணுவம் அந்த நாட்டில் உட்பிரவேசிப்பது சுலபம். ஆனால் அங்கிருந்து மீண்டும் திரும் புவதில் அது பாரிய சிக்கல்களை தற்போதைய உலகில் காணக்கூடி யதாக இருக்கிறது.

உலகமயமாக்கலின் மத்தியில் இன்று பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு எல்லைகளில்லாத நிலை ஏற்பட் டுள்ளது. எனவே ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு உலக நாடுகள் உதவவேண்டியது அவசியம் எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் குறிப் பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல இந்தப் பயிற்சி இலங்கை இராணுவத்தை பொறுத்தவரையில் முக்கிய நிகழ் வாகும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் நடைபெறும் இவ்வாறான பயிற்சி இலங்கையில் நடத்தப்படுவதால் இலங்கை இராணுவத்துக்கு சமா தானப் பாதையில் முக்கிய அனு பவமாகும். இன்று உலகளாவிய யுத்தம் ஒன்றுக்கு வாய்ப்பில்லாத போதும், பிராந்திய ரீதியில் பாது காப்பு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டி ருக்கிறது எனத் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி நிகழ்வில் இலங்கை இராணுவத்துடன் மொங் கோலியா, பங்களாதேஷ், ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் பசுபிக் பிராந்தியநாடுகள் என்பன பங்கேற் றன. இந்த நிகழ்வு இன்றும் நடை பெறுகிறது. (01)

## நாடாளுமன்றத்தில் கலவரம் செய்த

# எம்.பிக்கள் ஏழு பேருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

கடந்த 8 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் கலவரத்தை ஏற்படுத் திய நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கெதிராக, நாடாளுமன்ற நிலை யியற் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்தார்.

கடந்த 8 ஆம் திகதி நாடாளு மன்றில் நடந்த சம்பவங்களை நாடா ளுமன்ற சபா மண்டபத்தில் எடுக்கப் பட்ட வீடியோ பிரதிகள் மூலம் ஆராய்ந்து பார்ப்பதற்கு சபாநாயகர் தீர்மானம் எடுத்துள்ளார்.

இதேவேளை - நாடாளுமன்றக் கலவரத்தில் ஈடுபட்டதாகத் தெரி விக்கப்படும் ஏழு உறுப்பினர்களுக் கெதிராக நம்பிக்கையில்லாப் பிரே ரணையை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சியினர் திட்டமிட்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலதிகமாக கலந்துரையாடுவதற்கு எதிர்க்கட்சி கள் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இருநாட்களுக்கு ஒரு தடவை சந்தித்துப் பேசவும் இணக் கம் கண்டுள்ளன.

## கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பம்

கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சகல மாணவர்களுக்கு மான, 2003, 2004 ஆம் ஆண்டின் விரிவுரைகள் எதிர்வரும் திங்கட் கிழமை ஆரம்பமாகவுள்ளன.

விடுதி மாணவர்களை இன்று மாலை 6 மணிக்கு முன்னர் மட் டக்களப்பு வந்தாறுமூலை வளாக விடுதிக்கு சமூகமளிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பின் வடக்கேயுள்ள வாழைச்சேனை, தெற்கே உள்ள காத்தான்குடிப் பிரதேசத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும் என கிழக்குப் பல்கலைக்கழக உத விப் பதிவாளர் தெரிவித்தார்.

## விசேட கலந்துரையாடல்

வலி.வடக்குப் பகுதி பொது அமைப்புக்களின் ஒன்றிய விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 3.00 மணிக்கு தெல்லிப் பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் ஒன்றியத் தலை வர் சி.சிவமகாராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட கலந்துரையாட லில் ஒன்றியத்தின் எதிர்கால நட வடிக்கைகள் தொடர்பாக ஆரயப்பட வுள்ளதால் தங்கள் அமைப்பின் தலை வர், செயலாளர், பொருளாளர் ஆகி யோரை தவறாது கலந்துகொள்ளு மாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## மீனவ இளை..

கடற்தொழிலுக்குச் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை.

இதனால், அந்தப் பகுதியைச் சோர்ந்த நூற்றுக்கணக்கான படகு கள் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

எனினும், பின்னர் படையதிகாரி களுக்கும், மீனவர் சங்கப் பிரதிநிதி களுக்குமிடையே இடம்பெற்ற பேச் சுக்களையடுத்து நண்பகலுடன் இத் தடையைப் படையினர் விலக்கிக் கொண்டனர். (202)

## புலிகளுடனான...

இதனையடுத்தே ஜே.வி.பி. தமது நிலைப்பாட்டைத் தளர்த்தி யுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இருந்து தாம் விலகப்போவதில்லை யென ஜே.வி.பி. அறிவித்துள்ளது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக ஜே.வி.பி. வில கப்போவதாக வெளியான செய்தி தொடர்பாகவே ஜே.வி.பி. மறுப்புத் தெரிவித்துள்ளது.

# கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு விமானப் படையிடம்

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கையில் இலங்கை விமானப்படையினர் ஈடுப டுத்தப்படவுள்ளனர்.

விமான நிலையத்தில் ஏற்படும் பல்வேறு குறைபாடுகளைக் கருத் திற்கொண்டே, விமான நிலையம் மற்றும் விமான சேவைத் திணைக் களம் இந்த தீர்மானத்தை எடுத்துள் ளது.

பாதுகாப்புத்துறையின் வெற்றி டங்கள், நவீன தொழில் நுட்பப் பயிற்சி உபகரணங்களை கொள் வனவு செய்வதன் தேவை என்பன இந்தக் குறைபாடுகளில் முக்கியமா னதென விமானநிலைய மற்றும் விமானசேவை நிறுவனத்தின் முகா மைத்துவப் பணிப்பாளர் சாளிக்க விஜயசுந்தர தெரிவித்தார்.

விமான நிலையத்துக்கு நாளாந் தம் பெரும்பாலானோர் வந்து செல் வதனால் அதன் பாதுகாப்பை பலப் படுத்த வேண்டிய தேவை அவசிய மாகியுள்ளது.

விமான நிலையத்தின் பாது காப்புப் பிரிவு இலங்கை விமானப் படையின் கீழ் ஏற்கனவே கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# ஊடகத்துறை அமைச்சராக மங்கள சமரவீர நியமனம்

ஊடகத்துறை அமைச்சராக மங் கள சமரவீர நேற்றுப் பதவியேற் றார்.

ஜனாதிபதியின் முன்னிலையில் இந்தப் பதவிப்பிரமாணம் இடம்பெற் றது. ஏற்கனவே ஊடகத்துறை அமைச்சராகவும், அமைச்சரவைப் பேச்சாளராகவும் பதவி வகித்த ரெஜினோல்ட் குரே, மேல் மாகா ணசபைத் தேர்தலில் போட்டியிடு வதன் காரணமாக அந்தப் பதவி யில் இருந்து விலகியிருந்தார்.

இதனையடுத்து அரசாங்கப் பேச் சாளராகப் பதவியேற்ற மங்கள சமர வீர நேற்று ஊடகத்துறை அமைச் சராகவும் பதவியேற்றார்.

## அரசாங்கத்துக்கு...

ஒருங்கிணைந்தே இந்த சத்தி யாக்கிரகப் போராட்டத்தினை நடத் தவுள்ளன.

இந்த சத்தியாக் கிரகம் கொழும்பு நகருக்குள் உட் செல் லும் வீதிகள் அனைத்தையும் தடை செய்து ஜனநாயகவாதிகளின் ஒத்துழைப்புடன் ஒழுங்கமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அரசாங்கக் கட்சியினர் ஜன நாயக விரோதிகளாக நாடாளு மன்றில் மற்றைய அரசியல்க் கட்சிகளின் கருத்துக்களுக்கு, இடம் வழங்காமற் செயற்படுதல், பௌத்த பிக்குகளுக்கு தொல்லை கொடுத் தல், ஜனநாயக விரோதிகளாக அரச தரப்பிற்கு பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு, சட்டவிரோத செயல் களில் ஈடுபடுதல் போன்றவற்றுக்கு எதிராகவே இந்தச் சத்தியாக் கிரகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

நாடாளுமன்றம் மீளவும் அடுத்த மாதம் 20 ஆம் திகதி கூடவுள்ள நிலையில் அதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் இந்த சத்தியாக்கிரகத்தை பரந்துபட்ட அளவில் மக்களின் ஒத்துழைப்புடன் நடத்துவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வும் அவர் மேலும் தெரிவித் தார்.

# இறைமையைப் பாதிக்காத...

குறித்து பேச அரசாங்கம் உணர்ந் துள்ளது.

இடைக்கால நிர்வாகம் தொடர் பாக பேச்சுநடத்தும் இலங்கையின் இறைமையைப் பாதிக்காத வகையி லேயே அது நடத்தப்படும். இடைக் கால நிர்வாகம் என்பது இலங்கை யின் ஆட்புலத்திற்கும் இடைப்பட் டதாகவே பேச்சு நடத்தப்படும்.

இடைக்கால நிர்வாகம் தொடர் பாக பேச்சு நடத்தப்படும்போதே அர சாங்கம் இறுதித்தீர்வு குறித்தும் கவன மெடுக்கும். இந்தப் பிரச்சினையை தீர்ப்பது குறித்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு கட்சிக ளிடையே முரண்பாடுகள் உள்ளன. இவற்றைத் தீர்ப்பதற்காகவும் நான் அக்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை களை நடத்திவருகிறேன்.

போர்நிறுத்த உடன்படிக்கையை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்லும் வகையில் செயற்றிற னுள்ள சமாதானச் செயலகம் தற் போது அமைக்கப்பட்டுள்ளது. அத் துடன் சமாதான நகர்வை முன்னெ டுத்துச் செல்வதற்கு எனது தலை மையில் சமாதான பேரவை உரு வாக்கப்பட்டுள்ளது.

பொறுப்பான அரசாங்கம் எனும் வகையில் வடக்கு - கிழக்கில் அபி விருத்திப் பணிகளை முன்னெடுப்ப தற்கும் தயாராகவுள்ளோம் . வடக்கு- கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீண்டகாலமாக எண்ணியிருந்தோம்.

எனவே, இது குறித்து தொடர்ந் தும் பேச்சுவார்த்தை நடத்த தயா ராகவுள்ளோம். இதனடிப்படையி லேயே நோர்வேயை அழைத்து கலந்துரையாடினோம்.

இலங்கையில் சமாதானம் உரு வாகினால் மட்டும் நாட்டில் எதிர் கால அபிவிருத்தியை முன்கொண்டு செல்ல முடியும் என்பதை எனது அரசாங்கம் நன்றாக உணர்ந்துள் ளது.

இலங்கைக்கு ஆயிரம் மில்லி யன் அமெரிக்க டொலர் நிதியுதவி தற்போது கிடைத்துள்ளது. இதனை உரிய முறையில் பயன்படுத்தி இளைஞர் மற்றும் பட்டதாரிகளுக் கான வேலைவாய்ப்பை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தேர்தல் பிரசாரத்தின் போது வழங்கிய வாக்குறுதிகளை நிறை வேற்ற நடவடிக்கையை எடுத்து வரும் அதேவேளை விவசாயிகளுக் கான உரமானியங்களை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான கடந்த அரசாங் கத்தில் உருவாக்கப்பட்ட இளைஞர் படையணி செலவுகளை அடிப்படை யாக கொண்டதே ஒழிய செயற் திறன் மிக்கதாக இருக்கவில்லை.

எனவே, அவற்றைப் புனரமைத்து நாட்டிற்கு நல்லதொரு சமுதா யத்தை கட்டியெழுப்புவதே அர சாங்கத்தின் நோக்கமாகும்.

எனவே, இவ்வாறான நிலைப் பாட்டில் சமாதானத்தின் மூலமே நாட்டின் அபிவிருத்தியை முன் கொண்டு செல்ல முடியுமென்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளதென ஜனா திபதி மேலும் தெரிவித்தார். (01)

## நோர்வே...

வடக்கு - கிழக்கில் நிறுவ வேண்டுமென விடுதலைப்புலிகள் கோரிவருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் இந்த நிலைப்பாடு தொடர்பாக அரசாங்கம், நோர்வேயூடாக அனுப்ப உத்தேசித் துள்ள கடிதத்தில் பல மாற்று யோசனைகள் இடம்பெற்றிருப்பதாக வும் அந்த அமைச்சர் மேலும் தெரி வித்தார்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.